Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை (05.10.2012) பக்கங்கள் 20 ஓசை - 005
















# வட, கிழக்கு பிரச்சினை தீர சர்வதேசம் அவசியமில்லை

## கூறுகிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் பிரச்சினை இருக்கிறது. அதனை தீர்க்க வெளிநாடுகள் அவசியமில்லை என கொழும்பு கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

சில நாடுகள் இப்பிரச்சினையில் சுய இலாபம் தேட முயற்சிக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். நீர்கொழும்பு தம்மிட்ட கார்தினல் கூரே மத்திய நிலையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், சமயங்கள் என்ற அத்திவாரத்தில் குறிப்பாக பௌத்த சமய அடித்தளத்தில் கட்டியொழுப்பப்பட்ட இலங்கையின் கலாசாரம், பொருளாதார நலனுக்காக மாற்றப்படக்கூடாது. பொருளாதார அபிவிருத்திக்காக கலாசாரமும் சுற்றுச் சூழலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாவசிய பொருட்களின் விலை மூன்று மாதத்தில் அதிகரிக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாதகாலப் பகுதியில் மின்கட்டணம், எரிபொருள் விலை மற்றும் இறக்குமதித் தீர்வைகள் என்பன அதிகரிப்பதுடன் முன்னுரிமைத் தெரிவுகளை குழப்பி வைத்திருப்பதனால் அரசாங்கம் பாரிய நெருக்கடிக்கும் முகங்கொடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். வரவு - செலவுத்திட்ட பற்றாக்குறையை நிரப்புவதற்கு தேவையில்லாத செலவுகளை குறைப்பதற்குப் பதிலாக அரசாங்கம் அத்தியாவசிய செலவுகளை குறைத்து வருகின்றது என கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாடொன்றின்

19 ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து பளையில் விபத்து

## ஆசிரியர் உட்பட எழுவர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் ஆசிரியர் ஒருவர் உட்பட ஏழு மாணவர்கள் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மாணவர்களை வாத்திய அணி வகுப்பு பயிற்சிக்காக

19 ஆம் பக்கம் பார்க்க



# இந்திய வீட்டுத்திட்டத் தெரிவு பாரபட்சமென முறையீடு

இந்திய உதவியின் கீழ் இரண்டாம் கட்டமாக வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணிப் பிரதேசத்தில் இந்திய வீடுகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் நெடுங்கேணி ஒலுமடுவைச் சேர்ந்த பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திரவிடம் நேரடியாக முறையிட்டுள்ளனர். நெடுங்கேணிப் பிரதேசத்தில் அரச திட்டங்களின் கீழ் காணிகளைப் பெற்றுள்ள யாழ். மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கே இந்திய வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வவுனியா அரசாங்க அதிபரைச் சந்தித்து இது குறித்து எடுத்துக் கூறிய அவர்கள் எழுத்து மூலமாகத் தமது குறைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட வவுனியா அரசாங்க அதிபர், இந்திய வீடமைப்புத் திட்டத்தின்

19 ஆம் பக்கம் பார்க்க

# நவீன உலகை எதிர்கொள்வதற்கு தொழில்நுட்ப கட்டமைப்பு அவசியம்


## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

காலத்திற்கேற்ப வகையிலும், நவீன உலகை எதிர்கொள்ளக் கூடிய வகையிலும் தொழில நுட்பக் கட்டமைப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முதன்மை அப்பிள் மீள் விற்பனை நிலையத்தை (FUTUREWORLD Authorised Reseller) நேற்றைய தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நவீன உலகை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தொழில நுட்பக் கட்டமைப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்குரிய மின்னியல்

19 ஆம் பக்கம் பார்க்க



# முல்லையில் மீள்குடியேறியோருக்கு நிதிசேகரிக்கும் தமிழரசுக்கட்சி



முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்காக வவுனியா நகரில் நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஈடுபட்டனர். இந்த நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். நாளாந்த நடவடிக்கைகளுக்காக பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மாந்தவெளி மற்றும் தேப்பாபிளம் ஆகிய பிரதேசங்களில் மீள்குடியேற்றப் பட்டுள்ள மக்களிடம் பணம் இல்லை. இதனாலேயே மீள்குடியேற்றப்பட்டவர்களுக்காக நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுளோம் என தமிழரசுக் கட்சியினர் தெரிவித்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# குறைத்து மதிப்பீடு செய்யப்படும் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி

## ரவிநாத் ஆரியசிங்க விசனம்

யுத்தத்தின் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை சிலர் குறைத்து மதிப்பீடு செய்துள்ளதாக ஐ.நா.வின் ஜெனீவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் 63 ஆவது நிறைவேற்றுக் குழு

19 ஆம் பக்கம் பார்க்க

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## INVITATION FOR BIDS

## OUTSOURCING OF SERVICES FOR PREPARATION OF THE FIXED ASSETS REGISTER

The Chairperson, Procurement Committee of the University of Jaffna, Sri Lanka invites sealed bids for **Preparation of the Fixed Assets Register** from interested suitable firms with technical as well as financial competence in accounting and preparation of Fixed Assets Register.

**Scope of Work**

(01) Identifying the lapses in the existing Departmental/Sectional Inventory Registers and Updating the information/data

(02) Updating the Master Inventory Register

(03) Preparation of Item-wise Inventory Register

(04) Physical Verification of Fixed Assets of UJ held at all locations referred section (A) in the bidding document

(05) Marking the Identification Numbers to the Assets as per the nature and categories according to the standard as per existing regulations

(06) Valuation of Fixed Assets

(07) Identifying and recommending the unserviceable and disposable articles with a complete list, if any

(08) Preparation of Fixed Assets Register for immovable assets

(09) Computerization of Inventory Registers and Fixed Assets Registers and development and introduction ofsuitable Software/Program.

(10) Preparation of Fitting Register

(11) Training to the Staff

The Bids should be accompanied with a Bid Bond/Bid Security obtained from a recognized Bank in favour of the Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka valid for 90 days from the date of the bid opening. The sum of security should be the estimated value as specified in the bidding document.

Bidders are requested to pay a non-refundable bid fee of 1000.00 by money order drawn in favour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Officer or in cash at the Shroff Counter of the University of JAFFNA. Bidding documents with relevant specifications could be collected from the Senior Assistant Registrar/ Administration, University of Jaffna between 8th October 2012 to 19th October 2012 during office hours, by producing the money order or cash receipt. The money order/cash receipt should to be attached to the bidding documents.
Bids in duplicate should be sent by registered post to reach the Registrar or deposited in the Bid box available at the Registrar's Office, University of Jaffna on or before2.00 pm on 31st October 2012.Bids will be opened in the Board Room of the University of Jaffna, at 2.30 pm on the same day soon after the closure of Bids. Bidder or one authorized representative of the Bidder will be permitted to be present at the opening of Bids.The top left hand corner of the envelope should be marked as Bids for PREPARATION OF THE FIXED ASSETS REGISTER- UJ/ADMN/SERVICE/01.

Interested bidders may obtain further information from the Senior Assistant Registrar/ Administration University of Jaffna Thirunelvely Jaffna (Contact T.P No 021 222 6517) and view the Bidding Document in the same address on any working day from 9,00 hours to 16.00 hours.

*The decision of the Procurement Committee shall be final. Bidders are requested to strictly adhere to the conditions specified and given in the biding document. The University reserves the right to reject any bid without giving reasons.*

**REGISTRAR**
**4th October 2012**

(C/2039)

# நெடுந்தீவில் மினி சூறாவளி சேதங்களுக்கு இழப்பீடு

## பிரதேச சபை தவிசாளர் ஏற்பாடு

கடந்த வாரம் நெடுந்தீவில் ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய மழையை அடுத்து நெடுந்தீவில் பல பகுதிகளிலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுடைய பல சொத்துக்கள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் நெடுந்தீவு கடற்தொறிலார்களின் எட்டுப் படகுகள் வரையில் பலத்த தேமடைந்தது குறிப்பிடத்தக்கது மேலும் நெடுந்தீவு தளைதுறை கடற்கரையில் அமைந்துள்ள பல வீடுகள் காற்றினால் பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து செபநாயகபுர கடற்கரையில் அமைந்துள்ள சன சமூக நிலையம் பாலர் பாடசாலை என்பவற்றின் கூரைகள் பறந்து முற்றாக சேதமடைந்துள்ளது. இது தொடர்பாக கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கருத்து தெரிவிக்கையில் கடற்கலங்களுக்கு பாதுகாப்பான மீன்பிடித்துறைமுகங்கள் நெடுந்தீவில் அமைக்கப்படாமலே இச்சேதங்களுக்கு காரணம் எனவும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவுப் பிரதேச அமைப்பாளரும், நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளருமாகிய தானியேல் றெக்சியன் பாதிப்புக்குள்ளான இடங்களைப் பார்வையிட்டதுடன், உரிய சேதங்களுக்கு இழப்பீடுகள் பெற்றுத் தருவதற்கு தாம் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

# ஆசிரியர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், மாணவர் சமூகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக தீவக வலய ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (12)

◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் ஆசிரியர்களைக் கௌரவித்து வாழ்த்துக்களை வழங்கவுள்ளனர். (11)

◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (11)

◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈ ◈

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உத்தியோகத்தர் ரி.எஸ்.சண்முககுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

# இன்று திறப்பு விழா

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று காலை 11.00 மணிக்கு அதிபர் வே. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கட்டடம் என்றிப் திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# சந்நிதியில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் ஆன்மீக நிகழ்வு இன்று காலை 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் சித்தர் பாரம்பரியம் என்னும் பொருள் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

ஆர்வலர்கள் மற்றும் ஆன்மீக நண்பர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆன்மீக அறிவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கலை பண்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

# கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து

# வடக்கு மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்வியின் பின்னர் பரந்து கிடக்கும் உயர் கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்களை சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டல் பிரிவினர் வடக்கு மாணவர்களுக்கு காட்டியுள்ளனர் என வடமாகாண கல்விஅமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

சிகரம் கல்வி வழிகாட்டி பிரிவினரால் வெளியிடப்பட்ட தமிழ்மொழி மூல கல்வி வழிகாட்டி விபரக்கொத்துக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அனேகமான மாணவர்களுக்கு கிடைபதில்லை என்பதும், பல்கலைக்கழக அனுமதிக்கு தவக்கூடிய விதத்தில் பாடங்களை க.பொ.த உயர்தரத்தில் தெரிவு செய்வதற்கான வழிகாட்டும் ஆலோசனைகளும் மாணவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்பது பெரும் குறைபாடாகவே உள்ளதெனவும், இக் குறைகளை நீக்கும் நோக்கில் பொருத்தமான வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி மற்றும் வெளிநாட்டுக் கல்வி - தொழில் வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான வழிகாட்டல்கள் போன்ற ஆக்கங்களுடன் சிகரம் கல்வி வழிகாட்டி விபரகொத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டி விபரக்கொத்தில், முதலாவதாக கல்வி வழிகாட்டிப் பிரிவில் தேசிய பல்கலைக்கழகங்கள், பிற அரச உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் உயர்கல்வி நிறுவனங்கள், தொழிற்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பல உயர்கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்கள் தொடர்பான ஆக்கங்களும், கற்கைநெறி மற்றும் நிறுவனத் தெரிவுக்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், இரண்டாவதாக, விபரக்கொத்து பகுதியில் பாடத்துறை ரீதியாக அரச, தனியார் உயர்கல்வி, நிறுவனங்கள் தொடர்பான விபரங்களும், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், இணையத்தள முகவரி என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவதாக, வெளிநாட்டுக்கல்வி வழிகாட்டிப் பகுதி, வெளிநாட்டுக் கல்வியைத் தொடர்வதற்குப் பொருத்தமான நாடுகள், பாடநெறிகள், பல்கலைக் கழகங்களைத் தெரிவுசெய்வதற்கான வழிகாட்டி ஆலோசனைகளும் இறுதியாக, வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி என்ற பகுதி, தொழில் வாய்ப்பொன்றைத் தெரிவுசெய்தல் தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களையும், தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு அவசியமான திறன் விருத்தி பற்றிய விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

முதல் தடவையாக இவ்வாறானதொரு கல்வி - தொழில் வழிகாட்டி விபரக்கொத்து வெளியிடப்படுவது சிறந்ததொரு விடயமாகும். எதிர்காலத்திலும் இத்தகைய முன்னுதாரணமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்போது எமது பூரணமான பங்களிப்பும் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

# ஐயாயிரம் பாடசாலைத்திட்டத்தில் புதிய கட்டடம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு இணங்க 5000 ஆரம்ப பாடசாலைகளையும், 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலை கட்டடத்தைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையில் அபிவிருத்தி செய்யப்பட்ட கட்டடத்தை நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ஆர்.ரவீந்திரதாஸன்,நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் மாணிக்கராஜா உள்ளிட்ட அதிகாரிகள் இக்கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

# சனசமூக நிலையம் மீள புத்துயிர் பெறுமா?

(வரணி)

வடக்கு வரணியில் இயங்கி வந்த சனசமூக நிலையமொன்று எந்தவித செயற்பாடுகளும் இன்றி மூடப்பட்டுள்ள நிலையில் தற்போது காணப்படுவதாக இப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இச்சன சமூக நிலையத்தில் வாசகர்கள் படிப்பதற்கு வைக்கப்படும் பத்திரிகைகளைச் சிலர் திருடிச் செல்வதுடன், பத்திரிகைகளின் பக்கங்களைக் கிழிப்பதுமான சில அநாகரிகச் செயலகள் இடம்பெற்று வந்தமையாலேயே சனசமூக நிலையம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வாசகர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தாம் தகவல்களை அறிய முடியாது சிரமப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இங்குள்ள மக்களில் சிலர் 3 மையில் தூரமுள்ள வரணி பொது நூலகத்திற்குச் சென்றே பத்திரிகைகளை வாசிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வாசகர்களின் நன்மை கருதி இச்சனசமூக நிலையத்தை மீண்டும் இயங்கவைக்க சனசமூக நிலையத்தினர் ஆவன செய்ய வேண்டும் என இப்பிரதேச மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (150)

## நூல் வெளியீட்டு விழா

(தெல்லிப்பளை)

யா/மகாஜனாக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் பிரபல விலங்கியல் ஆசிரியருமான பொ.கனகசபாபதி எழுதிய "எம்மை வாழவைத்தவர்கள்" நூல் வெளியீட்டு விழா யா/மகா ஜனாக்கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்விப்புல சான்றோர்கள் பற்றிய வரலாற்றினையும், எமது மண்ணிற்கு பெருமை சேர்த்த புலமை மிகு அதிபர்களின் உன்னத பணிகளையும் தாங்கிவரும் இந்நூல் சிறந்த நூலாக வெளிவரவுள்ளதாக கல்லூரி சமூகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

# பரிசளிப்பு விழா

(அச்சுவேலி)

புத்தூர் - வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில்தின வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா , சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் அதிபருமான க.இரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் வைபவத்தினை அடுத்து வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (03)

★ ★ ★ ★

(கைதடி)

யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் 08 ஆம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர குு.பிரேமகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், ஓய்வுநிலை அதிபர் ச.ஞானலிங்கம், உலகதரிசன திட்ட அதிகாரி ஜெ.சர்வரமணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

# சண்டிலிப்பாயில் நடமாடும் சேவை பெருமளவான மக்கள் பயன்பெற்றனர்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்புப்பதிவு சம்பந்தமான நடமாடும் சேவையில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து தமது தேவைகளைப் பெற்றுக் கொண்டனர்.

பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் யு.என்.டி.பி.யின் அனுசரணையில் நடைபெற்ற இந்நடமாடும் சேவையில் அரசாங்க அதிபர் க.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இங்கு ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகை தந்து அடையாள அட்டைக்குரிய படங்களை எடுத்ததுடன் அதற்குரிய முத்திரைகளை அவர்களது விண்ணபபங்களில் ஒட்டி எடுத்துச் சென்றனர்.

விண்ணப்பங்களுக்குரிய முத்திரைக்கட்டணம், புகைப் படக்கட்டணம், பொலிஸாரின் முறைப்பாட்டுப் பிரதி, பிறப்பு இறப்புக்குரிய கட்டணம், முதியோர் அடையாள அட்டைக்குரிய புகைப்படம் என்பன யாவும் இலவசமாகவே பெற்றுக் கொடுக்கப்பட்டன.

பிறப்பு இறப்புப்பதிவை இதுவரை செய்யாதவர்களுக்கு உத்தேச வயது சான்றிதழ்கள் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் ஆனந்தி ஜெயரட்ணத்தால் விசாரணைக்குப் பின்னர் உடனுக்குடன் வழங்கப்பட்டன.

இந்நடமாடும் சேவையில் மானிப்பாய் பொலிஸ் நிலையப பொறுப்பதிகாரியும், அவரது உதயோகத்தர்களும், இளவாலைப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், யாழ்.செயலக ஆட்பதிவுத்திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்.செயலக பிறப்பு இறப்பு பதிவு அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமாதான நீதவான்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இப்பணிகளை மேற்கொண்டனர்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்நடமாடும் சேவை மாலை 7.00 மணிவரை இடம் பெற்றது.

இதன் மூலம் இப்பிரிவினைச் சேர்ந்த மேற்படி ஆவணங்கள் இல்லாதவர்கள் பெரும் பயனடைந்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இவ்வாறு இப்பணிகளை மேற்கொண்டதை ஏனைய பிரதேச மக்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும் செயலரையும் பாராட்டியுள்ளனர். (104)






யாழ்.மாவட்ட விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் உலக சிறுவர்தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்திற்கு, விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலான மௌன ஊர்வலம் அண்மையில் இடம்பெற்றது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் யாழ். நகரப்பகுதியூடாகச் செல்வதைக் காணலாம்

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## சந்தையில் விற்கப்படாத தினம்!

ஒக்டோபர் 5. இன்று உலக ஆசிரியர்கள் தினம். மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர்களைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்.

'எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு" என்று சொல்லப்படுவதற்கு உதாரணமாய் விளங்குபவர்கள் ஆசிரியர்கள் தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ சமூகத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்ற தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர்.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு உரியது. அவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல, உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியரின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அப்படியே பதியும். அதன் காரணமாக ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்களே உரிமையாளர்கள்.

யுனெஸ்கோ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, 'ஆசிரியரின் தன்மையினைக் கருத்திற்கொண்டு அங்கீகாரமளித்தல்' என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறையொன்றுக்காக அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக, உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் கொண்டாடப்பட்டும் வருகின்றது.

ஆனாலும் எல்லா நாடுகளிலும் இதே நாளில் கொண்டாடப்படுவதில்லை. பல்வேறு நாடுகளில், வெவ்வேறு திகதிகளில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்தந்த நாட்டைச் சேர்ந்த சிறந்த.கல்வியாளரை கௌரவிக்க அல்லது அந்தந்த நாட்டில், கல்வி தொடர்பாக ஏற்பட்ட ஒரு சிறப்பான மாற்றத்தை நினைவுகூர என்ற காரணங்களுக்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதால், ஒவ்வொரு நாட்டிலும் திகதி மாறுபடுகிறது.

இலங்கையிலும் வேறு சில நாடுகளிலும் ஒக்டோபர் 6 ஆம் திகதி, இந்தியாவில் செப்டெம்பர் 5 ஆம் திகதி, அமெரிக்காவில் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமை, சீனாவில் செப்டெம்பர் 10 ஆம் திகதி என ஆசிரியர் தினம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதில்லை என்பதும் ஆச்சரியம்தான்.

எத் தேசமாயினும், எக் காலப் பிரிவாயினும், எம் மனித சமூகமாயினும் 'ஆசிரியர்' என்ற பிரிவினர் இரண்டு கருத்துக்கு இடமில்லாமல் மரியாதைக்குரியவர்களே. ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்தைத் தாங்கவிருக்கும் தூண்களுக்கு வைரம் பாய்ச்சுகின்றவர்களும் அவர்களே. எமது மனதளவு நன்றிக்கும், செயலளவு மரியாதைக்கும் உரித்துடையவர்களே.

ஆனாலும் தந்தையர் தினம், அன்னையர் தினம், சிறுவர் தினம் போன்ற தினங்களுக்குக் கிடைத்துள்ள விளம்பரமும் பிரபல்யமும் ஆசிரியர் தினத்திற்கு இல்லை என்பதும் கவனிப்புக்குரியது. அதைவிட, காதலர் தினம் என்றால் நமது வானொலிகளும் தொலைக்காட்சிகளும் செய்யும் ஆர்ப்பாட்டங்களில் ஒரு வீதமும் ஆசிரியர் தினத்திற்கு இல்லை என்பதும் நம் சமூகப்பண்பை வெளிக்காட்டி நிற்பதுதான்.

ஒரு வகையில் காதல் எனும் மனித உணர்வை சந்தைப் பொருளாகி கேவலப்பட்டது போன்று 'கல்வி வியாபாரி' அல்லாத உத்தம ஆசான்களின் மரியாதை சந்தையில் விற்கப்படாமை நன்மையாகவே தோன்றுகின்றது. ஆசிரியர்கள் தப்பித்தார்கள் என்றே சொல்ல வேண்டும். - ஆசிரியர்

# அறிவு புகட்டும் ஆசான்களை உள உவகையுடன் பாராட்டுகிறேன்



"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய எமது மாணவச் செல்வங்களுக்கு அறிவு புகட்டும் சான்றோராகிய உங்களை உள உவகையுடன் பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன் என வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்றைய தினத்தில் தங்களதும் தங்கள் குடும்பத்தினரதும் உளம் பொங்க என்றும் இன்புற்று இச் சேவையை மேலும் சிறப்புறத் தொடர்வதற்கு எல்லா்ம் வல்ல இறைவனின் பேரருளை வேண்டி நிற்பதுடன் எனது நல்லாசிகளையும் வழங்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

மேலும் இன்றைய கால கட்டத்தில் ஆசிரிய பெருந்தகைகளாகிய தாங்கள் மாணவர்களின் உள்ளத்தைப் போசித்து நல்ல மனப்பாங்குடைய பிரஜைகளை உருவர்க்குவதில் மட்டுமன்றி மாணவரது சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், தனிநபர் திறன்கள், தேடல் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்வதினூடாக மாணவர்கள் புதிய வகையில் சிந்திப்பதில் சிறந்த அறிவைப் பெற்று பகுப்பறிவுத் திறனை வெளிக்கொணர்வதற்கு ஏற்ற வகையில் மாணவர்களுக்கு வாய்ப்பளித்து சீரிய தீர்மானங்களை எடுக்கக் கூடிய, புதியதோர் சமூதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்குவதற்குமான ஆக்கபூர்வமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் உணர்வு பூர்வமாக செயற்படுமாறு அன்புடன் வாழ்த்துகின்றேன். எனத் தெரிவித்துள்ளார்.

# திருமணத் தகராறு தாக்குதலில் முடிந்தது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் திருமண விடயத்தில் ஏற்பட்ட தகராறினால் குடும்பஸ்தர் மைத்துனரால் கடுமையாக தாக்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மருதங்கேணி செம்பியன்பற்றைச் சேர்ந்த சாய்பு கபிற் (வயது-64) என்ற முஸ்லிம் குடும்பஸ்தரே இவ்வாறு தாக்கப்பட்டவராவர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த நபரின் தங்கையை மனைவியின் தம்பி திருமணம் செய்து தருமாறு கேட்டபோது காயமடைந்த நபர் குடிகாரனுக்கு எனது தங்கையைத் திருமணம் செய்து தரமாட்டேன் என வாக்கு வாதத்தில் ஈடுபட்டதை அடுத்தே குறித்த நபரை மைத்துனர் தலையில் பலமாகத் தாக்கியுள்ளார். இதனால் காயமடைந்த அவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (116)

# தேசிய மாணவர் படையணியின் பான்ட் வாத்திய பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

தேசிய மாணவர் படையணியின் 20 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் மேலைத்தேய பான்ட் வாத்திய பயிற்சிப் பட்டறை நேற்று ஆரம்பமானது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இந்த இரு நாள் பயிற்சிப்பட்டறை இடம்பெறுகின்றது. ஆரம்ப விழாவில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

உடற்கல்வி மேலதிக மகாணப் பணிப்பாளர் சத்தியபாலன், மாணவர் படையணியின் மேலதிக பணிப்பாளர். ஜி.சமரக்கோன், 2 ஆம் படையணியின் கட்டளைத் தளபதி எச்.எம்.எச்.பிலபபிட்டிய இராணுவ அதிகாரிகள் பாடசாலை பான்ட் வாத்திய குழுவினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களே இதில் பங்குபற்றியுள்ளனர். 1950 ஆம் ஆண்டு அரசினால் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து இப் படையணியின் மூலம் மாணவர்களுக்கிடையிலான ஒற்றுமை தலைமைத்துவம், உடற்பயிற்சி, என்பவற்றை வளர்க்க முடிவோடு இலங்கையில் எதிர்கால சந்ததியின் வளர்ச்சிக்காகவும் ஒற்றுமைக்காகவும் இத்திட்டம் தற்போது யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

# வீதி அபிவிருத்தியின் போது கூடுதலான காணிகள் சுவீகரிப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீதியின் வீதி அகலிப்புப் பணியின் போது கூறப்பட்டதற்குக் கூடுதலாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் காணி சுவீகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ். பருத்தித்துறை வீதி அகலிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு அமைவாக வீதியின் இருமருங்கிலும் உள்ள பொதுமக்களது காணியில் வீதியோரமாக காணி விட்டுக்கொடுக்கப்பட்டு வருகின்றது. இந் நிலையில் தமது காணியில் (1/4பரப்பு) காணி வீதிக்கு எடுக்கப்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட குறித்த நபர் நேற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றைப்பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் தமது காணிக்கான உடைக்கப்பட்ட மதில் சுவர் தரமற்ற விதமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கட்டித்தரப்பட்டிருப்பதுடன் மதில் சுவரிற்கு பூச்சுப்பூசப்பட்டவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு தமது காரியாலயத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்திருப்பதனை உறுதிப்படுத்திய இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் இந்த முறைப்பாடு குறித்து மனித உரிமை ஆணைக்குழு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

# தனியார்துறை ஊழியர்களுடன் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தனியார் வர்த்தக நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகள், தனியார் கம்பனிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் வேலை நேரம். விடுமுறை. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர்களின் நலன்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட தொழில் அலுவலகத்தினால் நாளை சனிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட வணிகர் கழக கட்டடத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே சகல ஊழியர்களும் தவறாது கலந்துகொண்டு தொழில்சார் நன்மைகளை அறிந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொழில் அலுவலக உதவித் தொழில் ஆணையாளர் நீ.ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# அமெரிக்க அரசியல் 2012

ராம்

**ஊரெங்கும் சண்டை, உலகமெங்கும் யுத்தமென்றால் அமெரிக்கர்களுக்கு அல்வா சாப்பிடுவது போல் இனிக்கின்ற விஷயம்தானே இப்போதெல்லாம் ஒரு பேச்சுக்குக்கூட உலக சமாதானத்தைப் பற்றி எல்லாம் அமெரிக்காவில் யாரும் பேசுவதில்லை. அது அவுட் ஒஃப் பாஷன் ஆகிவிட்டது.**

அமெரிக்க அரசியல் ஆடுகளம் சூடுபிடித்து விட்டது.

கடந்த சில பல வருடங்களில் என்னவெல்லாம் நடந்து முடிந்துவிட்டது!

“ஈராக்கில் சதாம் ஹுசேன் Weapons of Mass Destruction பதுக்கி வைத்திருக்கிறார். எங்களிடம் ஆதாரபூர்வமான சான்றுகள் இருக்கின்றன” என்று அதிரடியாகப் பொய்யைச் சொல்லி ஈராக்கில் நுழைந்து அந்த நாட்டையே சின்னாபின்னமாக்கி அவர்களுடைய எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றிய அமெரிக்க அநியாயத்தை யாரும் அதற்குள் மறந்திருக்க வாய்ப்பில்லை.


முட்டாள்தனமாக, ஈகோவால் மட்டுமே செலுத்தப்பட்ட ஆப்கானிஸ்தான், ஈராக் போர்களினால் பெரும் செலவுக் கணக்கும் உயிர்ச் சேதமும் கணக்கு வழக்கே இல்லாமல் உயர்ந்துகொண்டே போனது. தற்போதைய (செப். 2012) கணக்குகளின்படி இன்னமும் 70,000 அமெரிக்க வீரர்கள், எண்ணற்ற தளபாடங்கள் போர்முனைகளில் இருக்கிறார்கள். சற்றேறக் குறைய 6500 அமெரிக்கப் படைவீரர்கள் உயிர்ப் பலியாகி இருக்கிறார்கள்.

மோர்ட்கேஜ் கம்பெனிகளும், வங்கிகளும் அடிப்படையான எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் பில்லியன் கணக்கில் தொடர்ந்து ஊழல் பண்ண அரசு அனுமதி லைசென்ஸே வழங்கப்பட்டு நாட்டை அவர்கள் சுரண்டி எடுத்தது, எப்பாடுபட்டாவது அமெரிக்கப் பொருளாதாரத்தில் மேல்மட்ட 1 வீதத்தில் இருக்கும் மகா பில்லியனர்களுக்கு மட்டும் அதீத வரிச்சலுகைகள் தொடர வேண்டும், நாட்டின் அடிப்படைக் கட்டுமான ஊழியர்களும், நடுத்தர மக்களும், ஏழை எளியவர்கள், வறியவர்கள், மாணவர்கள், முதியவர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்றெல்லாம் ஆட்சி செய்த குடியரசுக் கட்சியினர் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தார்கள்.

அடுத்த தேர்தலுக்கு வேட்பாளர்களை அறிவிக்கும் வேளை வந்துவிட்டது. ஒபாமாவுக்கு எதிராக யாரை யாவது அடுத்த தேர்தலில் நிறுத்தவேண்டுமே என்று இரண்டு வருஷங்களாக குடியரசுக் கட்சியினர் தவித்தே போய்விட்டார்கள். ஒரு உருப்படியுமே தேறவில்லை. கடைசியில் தேடிப்பிடித்து இழுத்து வரப்பட்டவர்தான் மிட் ரொம்னி.

யார் இந்த மிட் ரொம்னி?

இந்தக் கதையை கொஞ்சம் விரிவாகவே சொல்ல வேண்டும். இவருடைய அப்பா ஜோர்ஜ் ரொம்னி 1968ஆம் வருட ஜனாதிபதி தேர்தலில் ரிச்சர்ட் நிக்ஸனை எதிர்த்துப் போட்டிபோட்டு மண்ணைக் கவ்வியவர். தான் தோற்றுவிட்டாலும் எப்படியாவது தன்னுடைய ரொம்னி குடும்பத்திலிருந்து ஒருவரை பிரதான அரசியலுக்கு எப்படியாவது இழுத்து வந்தே ஆகவேண்டும் என்று பிரம்மப் பிரயத்தனம் செய்தவர். பணம் பண்ணுவதற்காக எந்த ஒரு உபாயத்தையும் செய்யக் கூடியவர்களே இவர்கள். மிட் ரொம்னியும் பிரபலமான ஒரு கம்பெனியின் தலைவராகி உலகத்தின் எல்லாமூலைகளிலும் காசைப் பதுக்கிவைத்திருக்கும் பில்லியனர்தான்.



முதலில் ரொம்னியும் ஜனநாயகக் கட்சியிலேயே இருந்தார். ஜோன் கென்னடியின் கடைக்குட்டித் தம்பியைத் தோற்கடிக்க முயன்று மண்ணைக் கவ்வியவர். தோற்ற மறுநாளே “இனிமேல் அரசியல் பக்கமே தலை காட்ட மாட்டேன்” என்று சூளுரைத்து விட்டுப் பிறகு 1993 இல் குடியரசுக் கட்சிக்குத் தாவினார்.

மாஸசூஸெட்ஸ் ஆளுநராக 2002இல் பொறுப்பேற்றார். அரசியல் அழுத்தம், நெருக்கடிகள் தாங்காமல் அடுத்த தேர்தலில்கூட நிற்காமல் வனவாசம் போயிருந்தவரை இந்த வருஷம் குடியரசுக் கட்சி, ஆலையில்லாத ஊருக்கு இலுப்பம்பூ சர்க்கரையாக இழுத்து வந்து நிறுத்தி இருக்கிறது. கடந்த மாத கட்சித் தலைமைக் கூட்டத்தில் தன் கட்சியின் அபேட்சகராகவும் அதிகாரபூர்வமக அறிவித்துவிட்டது!

ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமாவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு விட்டார். அந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் உரை குறிப்பிடத்தக்கது. “கட்சிப் பாகுபாடுகளை மறந்து ஒபாமா எதிர்க்கட்சிக் காரர்களுடன் பாராட்டும் நல்லுறவு, தக்க சமயத்தில் அமெரிக்க கார் தொழிலுக்குக் கை கொடுத்துத் தூக்கி விட்ட புத்திசாலித்தனம்” எல்லாவற்றையும் புகழ்ந்த கிளிண்டன் “மிக முக்கியமான இந்த காலகட்டத்தில் ஒபாமாவை விட்டால் இந்த நாட்டுக்கு வேறு கதி இல்லை, குடியரசுக்காரர்கள் மீண்டும் தலை தூக்கினால் உலகப் பொருளாதாரமே மீண்டும் அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டு விடும்” என்றார்.

ஆனாலும், அரசியல் முட்டுக் கட்டைகளால் முக்கியமான விஷயங்களில் முடிவெடுக்க முடியாமல் ஒவ்வொரு முறை ஒபாமா சுணங்கும்போதும் அவர் கவனிக்கப்படுகிறார், கணிக்கப்படுகிறார், அவருடைய பிரபலத்தின் சுட்டெண் கீழே இறங்குகிறது.

அதே போல், என்னதான் சக்திமிக்க லொபியிஸ்ட்கள், வங்கியாளர்கள், பெரும் பணக்காரர்களின் தன்னார்வக் குழு போன்ற கவச குண்டலங்களால் ரொம்னியைச் சுற்றிலும் பெரும் பணக்கார தடுப்புச்சுவர் எழுப்பப்பட்டிருந்தாலும் ரொம்னியின் ஒவ்வொரு அசைவும் ஏழை வாக்காளனின் கவனத்திலிருந்து தப்புவதில்லை. எப்படியாவது உண்மை வெளிவந்து விடுகிறது!

பெரும் சுனாமியென எழும் என்று சிலர் எதிர்பார்த்த மிட் ரொம்னி அலை சின்ன நாய்க்குட்டியாய் சுருண்டு காலை நக்கிவிட்டு வாலையும் பின்னங்காலிடுக்கில் சுருட்டிக் கொண்டு ஓடிவிடும் போலிருக்கிறது.

கடந்த மாதத்தில் ரொம்னி செய்த இரண்டு மாபெரும் அபத்த விஷயங்கள்.

முதல் அபத்தம்:

Arab Spring என்று உலக மீடியாவால் கௌரவிக்கப்பட்ட முஸ்லிம் உலக ஜனநாயக தேடுதல் வேட்கை அலை, மக்களுக்காக மக்களாட்சி வசந்த உற்சவம் (இது உண்மையான ஜனநாயக வேட்கை அலைதானா அல்லது அமெரிக்க சிஐஏவால் ஆட்டி வைக்கப்பட்டு ஃபில்ம் காட்டப்பட்ட கானல் நீர் ஓவியமா என்கிற அரசியலுக்குள் செல்ல வேண்டாம். அமெரிக்கா ஒரு பெரிய ஜனநாயக விரும்பி நாடு என்று தன்னைத்தானே அடிக்கடி பிரகடனப்படுத்திக் கொள்ளும், ஜனநாயக மகிமை பற்றியெல்லாம் ஓயாமல் லெக்சர் அடிக்கும், கொடுங்கோல் ஆட்சிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் - அதாவது அசாஞ்சே, குவாண்டநாமோ, மியான்மார், சீனா என்றெல்லாம் நீங்கள் ஏதாவது பதில் கேள்வி கேட்கவில்லை என்றால்!)

எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது - இந்த உற்சவ கோலாகலத்தின் நடுவே கயவாளித்தனமாக ஒரு சில அரை வேக்காட்டு அமெரிக்கப் பிரஜைகள் கொளுத்திப்போட்ட நாலாம் தர சினிமா ஒன்றின் விபரங்கள் வெடிக்கும்வரை.

இஸ்லாமை ஆதரிக்கும் பல நாடுகளில் அமெரிக்காவுக்கு ஆர்ப்பாட்டங்கள் ஒன்றும் புது செய்தி இல்லை. இது வழக்கமானதுதான். ஆர்ப்பாட்டம் முடிந்தவுடன் அடுத்த வருடம் வரை எல்லோரும் மறந்துகூடப் போய்விடுவார்கள்.

ஆனால், அதிபுத்திசாலித்தனமாக படம் எடுப்பதாக நினைத்துக்கொண்டு அந்தக் கோமாளிகள் இஸ்லாமையும் நபிகளையும் இழிவு படுத்தும் நோக்கத்துடன் எடுத்த சினிமா விவகாரம் சமீபத்தில் வெடிக்க ஆரம்பித்தவுடன், அமெரிக்காவும் லிபியாவும் பரஸ்பரம் மன்னிப்பு கோரின.

அதாவது “யாரோ ஒருசில அமெரிக்க தீவிரவாதிகளின் கீழ்த்தரமான வேலை இது. எங்களுக்கு இதில் ஏதும் சம்பந்தமில்லை” என்று அமெரிக்காவும், “அமெரிக்க கொன்ஸலேட் மீதான தாக்குதலில் தங்களுக்கு எந்தவிதப் பங்கும் இல்லை” என்று எகிப்தும், லிபியாவும் பரஸ்பரம் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் ரொம்னி தன் சற்றே பெரிய மூக்கை இதில் நுழைக்கிறார்.



“சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்கா இப்படியெல்லாம்பொடியன்களிடம் மன்னிப்பு கோருவது மகா கேவலம். நம் குலமென்ன, கோத்திரமென்ன, அணுகுண்டு கையிருப்பு என்ன, அதிரடி ஆயுத பாரம்பரியமென்ன, இத்யாதி, இன்னபிற என்பதாக.

இது குடியரசுக் கட்சிக்காரர்களே ஆச்சரியப்பட்ட விஷயம். பொதுவாக, அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகள், நிகழ்ச்சிகள் பற்றி எதிர்க்கட்சிகள் எப்போதுமே ஒரு ஒற்றுமை முகம் காட்டி அடக்கி வாசிக்கும் பாரம்பரியம் உள்ளது. எனவே, ரொம்னியின் சொந்தக் கட்சிக்காரர்களே அவர் இப்படி தத்துப்பித்தென்று உளறுவதை ரசிக்கவில்லை.

இந்த அசிங்கமான படம் பற்றிய விவகாரத்தை விடுங்கள். குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் அறிவிக்கப்பட்ட போதே “ஒபாமா எதற்காக நம் நாட்டின் மானத்தை அடகு வைக்கிறார்? எதற்கெடுத்தாலும் போய் முஸ்லிம் நாடுகளிடம் மன்னிப்பு கேட்கிறார்?” என்றெல்லாம் பிரசாரம் செய்ய ஆரம்பித்தவர் ரொம்னி!

“There are anti-American fires burning all across the globe; President Obama’s words are like kindling to them” என்று “No Apology: The Case for American Greatness” என்கிற தலைப்பில் ரொம்னி அறிக்கை விட்டார்.

ஊரெங்கும் சண்டை, உலகமெங்கும் யுத்தமென்றால் அமெரிக்கர்களுக்கு அல்வா சாப்பிடுவது போல் இனிக்கின்ற விஷயம்தானே! இப்போதெல்லாம் ஒரு பேச்சுக்குக்கூட உலக சமாதானத்தைப் பற்றி எல்லாம் அமெரிக்காவில் யாரும் பேசுவதில்லை. அது அவுட் ஒ.்.ப் பாஷன் ஆகிவிட்டது.

இரண்டாவது அபத்தம்:

சமீபத்திய மூடிய அறைக் கூட்டம் ஒன்றில் ரொம்னி அபத்தங்களை அள்ளி வீசியதாக “மதர் ஜோன்ஸ்” என்கிற இணையத்தளத்தால் ஒரு ரகசிய வீடியோ பதிவு செய்யப்பட்டு அது இப்போது வெளிவந்து சக்கைப்போடு போட்டுக்கொண்டிருக்கிறது. அதில், “அமெரிக்காவில் பாதிக்குப் பாதி வேலை செய்யாத சோம்பேறிகள், இவர்கள் வரியும் கட்டுவது கிடையாது, எனக்கு வோட்டும் போட மாட்டார்கள். இவர்களை நான் கழித்துக்கட்டி விடப்போகிறேன்” என்றிருக்கிறார்.

அதில் இன்னும் மோசமாக அவர் பேசி இருக்கும் பல விஷயங்களை அந்தத் தளம் இன்னமும் வெளியிடவில்லையாம்! நடுத்தர, உழைக்கும் வர்க்கத்தைப் பற்றியும், மெக்ஸிகோ தேசத்தவர்கள் பற்றியும், ஆபிரிக்கர்கள், வெளிநாட்டிலிருந்து வந்தேறிகள் பற்றியும் அதில் அவர் தாறுமாறாகப் பேசி இருப்பதாக நம்பகமான தளங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இந்த மிட் ரொம்னி யார், இவருக்கு எப்படி இவ்வளவு பணம் வந்தது? ஏன் இவர் இன்னமும் 2010 வருமான வரிக்கணக்கு விபரங்களைக் காட்ட மறுக்கிறார்? இவருடைய உண்மையான கோடீஸ்வர ஆதரவாளர்கள் யார் யார்? என்ற விபரங்கள் முழுவதுமாகத் தெரியாமல் அமெரிக்க வாக்காளர் குழம்பி இருக்கும் நிலையில் ரொம்னியின் சுயரூபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

நிக்சனின் குடியரசுக் கட்சி வழித்தோன்றல் அல்லவா? அது மகா கேவலமாக இருப்பதில் வியப்பில்லை.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாக்காளர்களுக்குத் துரோகம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ லிம் காங்கிரஸ் வாக்காளர்களுக்கு துரோகம் இழைத் துள்ளதாக ஐக் கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

திவிநெகும சட்டத்திற்கு ஆதரவளித்தமை மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

திவிநெகும சட்டம் தொடர்பில் கிழக்கு மாகாணசபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித் தனர். மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் நோக்கிலேயே திவிநெகும சட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அமெரிக்காவில் வலியுறுத்தியுள்ள நிலையில், கிழக்கு மாகாணசபையில் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் நடவடிக்கைகளினால் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக லக்ஸ்மன் கிரியல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

# அம்பாந்தோட்டையில் ஏற்றுமதி வலயம் 228 ஹெக்டேயர் காணி ஒதுக்கீடு



(கொழும்பு)

அம்பாந்தோட்டை, மிரிஜ் ஜவில பிரதேசத்தில் ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது. இதற்காக 228 ஹெக்டெயர் நிலப்பரப்பு ஒதுக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

வாகனங்களை ஒன்றுதிரட்டு தல், நிர்மாணத்துறைக்கான உற்பத்திகளை வழங்குதல், செயற்திறன் கொண்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் உள் ளிட்ட உற்பத்தி கைத்தொழில் நடவடிக்கைகள் இந்த வலயத் தில் முன்னெ டுக்கப்படவுள் ளன.

அம்பாந் தோட்ட துறை முகம் மற்றும் தற்போது நிர் மாணிக்கப் பட்டு வரும் விமான நிலையம் உள்ளிட்ட இந்த மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக் கைகளை மையமாகக் கொண்டே இந்த வலயம் நிர்மாணிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

# புலிகள் மீள ஒருங்கிணைய இந்தியா இடமளிக்காது



(கொழும்பு)

புலிகள் மீள ஒருங்கிணை வதற்கு இந்திய அரசாங்கம் இடமளிக்காது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ புலிகள் மீள இயங்குவதனை இந்தியா அனு மதிக்காது.

தமிழீழ விடுதலைப் புலி களின் நடவடிக்கைகளினால் இந்தியாவும் பாதிக்கப்பட்டிருந் தது என அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட இடம்பெயர் மக்களுக்கு இந்தியா வழங்கி வரும் உதவிகள் பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

# திவிநெகும சட்டமூலத்தினால் சிறுபான்மையினருக்கு பாதிப்பு இல்லை

(கொழும்பு)

திவிநெகும சட்டமூலத்தி னால் சிறுபான்மையினருக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே கிழக்கு மாகாண சபையில் இந்த சட்டமூலம் வாக்கெடுப் பிற்கு விடப்பட்டபோது எமது கட்சி ஆதரவாக வாக்களித்தது என அவர் குறிப்பிட்டார்.

இந்த திவிநெகும சட்டமூலத் தின் ஊடாக மாகாண சபைக ளுக்கு வழங்கப்பட்டுள்ள எந்த அதிகாரங்களும் மீளப்பெறப்பட மாட்டாது.

இந்த சட்டமூலம் தொடர்பில் கிழக்கு மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழு பேரும் கலந்தாலோசித்த பின்னரே இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

அத்துடன் இந்த சட்டமூலம் ஏற்கனவே அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டதாகும்.



என்னைப் பொறுத்தவரை நான் இந்த "திவிநெகும" உத் தேச செயற்திட்டத்தை ஆராய்ந்து பார்த்தபோது அதில் பாரதூர மான தவறுகளோ, விளைவு களோ இருப்பதாக கருதமுடிய வில்லை. எல்லாமே ஒரு திணைக் களத்தின் கீழ் வருவதற்கான ஏற்பாடுகள் இதில் உள்ளன. இதன்படி இதிலுள்ள ஊழியர் கள் திணைக்களத்தின் கீழுள்ள அரச ஊழியர்களாகவே இருப் பர்.

ஆதிகார சபை ஒன்று இருக் குமாயின் அதில் அமைச்சர் ஒருவரின் ஊழியர்களே இருப் பர். திணைக்களம் என்று வரு போது அதிலுள்ளவர்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஊழியர்களாகவே இருப்பார். அவர்கள் சுயாதீனமானவர்கள். இந்த "திவிநெகும"வை கட்டுப் படுத்தும் திணைக்களம் நேரடி யாக கணக்காய்வாளர் நாயக திணைக்களத்திற்கு பதில் சொல்லியாக வேண்டும் எனத் தெரிவித்தார்.



# கொழும்பு நகர எல்லைக்குள் 'சிவப்பு' வலயம் அமையாது

(கொழும்பு)

கொழும்பு நகர எல்லைக்குள் சிவப்பு விளக்கு வலயத்தை அமைக்கும் திட்டம் கொழும்பு மாநகரசபைக்கு இல்லையென கொழும்பு மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் டபிள்யூ.பி.மலகமுவ கொழும்பு நகரினுள் சிவப்பு விளக்கு வல யத்தை அமைப்பதற்கான முன் மொழிவை வைத்தார். ஆனால் இதுவொரு தனிப்பட்டவரின் கருத்து மட்டுமெனபதால் இது பற்றி மேல் நடவடிக்கை எடுக் கப்படமாட்டாதெனவும் அவர் கூறினார்.

இந்நாட்டில் பாலியல் துன் புறுத்தல்களும் சிறுவர் துஷ்பிர யோகங்களும் பெருமளவில் இடம்பெறுகின்றன. சிவப்பு விளக்கு வலயம் அமைக்கப்பட் டால், அப்பாவிப் பெண்களுக் கும், சிறுவர்களுக்கும் தீங்கில் லாமல் மக்கள் தங்களது பாலி யல் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள் இவ்வாறான சிவப்பு விளக்கு வலயம் தாய்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பல ஆசிய நாடுகளின் ஒருங்கி ணைந்த பகுதியாகும்.

ஏன் இலங்கை இதனைப் பின்பற்ற முடியாது? இவ் அறிவு பூர்வமான யோசனையின் பலா பலனை இப்போது உணரமுடி யாது. ஆனால் எதிர்வரும் வரு டங்களில் இதனை அறிந்து கொள்ளமுடியுமெனவும் மாநகர சபை உறுப்பினர் டபிள்யூ.பி.மலக முவ கூறினார். விபசார நடவடிக் கையைச் சட்டபூர்வமாக்கு வதற்கு மறுப்பதற்கான கார ணத்தை மலகமுவ கேட்டார்.

இந்நாட்டில் சூதாட்ட நிலை யம் மற்றும் மதுபான நிலையங் கள் சட்டபூர்வமாக்கப்பட்டமை போன்று, ஏன் விபசார நட வடிக்கையைச் சட்டபூர்வமாக்க முடியாது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இருப்பினும் சிவப்பு விளக்கு வலயத்தை அமைப்பதற்கான முன்மொழிவு ஆலோசனையை அர்த்தமற்றதென மேயர் கூறி னார்.

## நாட்டைவிட்டு வெளியேற மாலக சில்வாவுக்கு அனுமதி

அமைச்சர் மேர்வின் சில்வா வின் மகன் மாலக்க சில்வா எதிர் வரும் 10 ஆம் திகதி முதல் நவம்பர் 20 ஆம் திகதிவரை நாட்டைவிட்டுச் செல்வதற்கு நீதி மன்றம் அனுமதியளித்துள்ளது.

மாலக சில்வா உயர் கல்விக காக ஐக்கிய அமெரிக்காவுக் குச் செல்லவில்லையெனக் கூறி, மாலக சில்வாவின் சட்டத்தரணி ஜயந்த வீரசேகர கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த வழக்கு விசாரணையின் போது மாலக சில்வா உயர் கல்விக்காக வெளிநாடு செலவ தாக தவறுதலாக நீதிமன்றத் தில் சட்டத்தரணிகளால் தெரி விக்கப்பட்டது. இவர் உண் மையில் சுற்றுலாவுக்காகவே வெளிநாடு செல்கின்றாரென மாலக சில்வாவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய அமெரிக்கா அனுமதி

(கொழும்பு)

ஈரானுக்கு எதிரான பொரு ளாதாரத் தடை தொடர்பாக இலங்கை நடந்துகொண்ட முறை மையிட்டு திருப்தி தெரிவித் துள்ள அமெரிக்கா, இலங்கை ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு தற் காலிகமாக சம்மதித்துள்ளதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொரு வர் தெரிவித்தார்.

இலங்கை மீது விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்தும் நோக்கில் தாமும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் அமெரிக்க இரா ஜங்கத் திணைக்கள பிரதிநிதி யான அலிசனுடன் வாஷிங் டனில் பேசியதாக இவ் அதிகாரி யான சில்வா கூறினார்.

அமெரிக்காவின் தடைக்கமைய இலங்கை, ஈரானிய எண்ணெய் இறக்குமதியை குறைத்ததை யிட்டு அமெரிக்கா திருப்தியடைந் துள்ளது.

சப்புகஸ்கந்தை பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தில் குறித்த தொரு வகையான ஈரானிய மசகு எண்ணெயை மட்டுமே சுத்திகரிக்கமுடியும். இதற்காக ஈரானிலிருந்து 10 கப்பல் மசகு எண்ணெயை இலங்கை இறக்கு மதி செய்வதை அனுமதிக்க அமெ ரிக்கா தயாராகவுள்ளதெனவும் அவர் கூறினார்.

ஆயினும் இலங்கை ஈரானிட மிருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதில் வேறு தடைகளுள்ளன. கப்பல்களுக்கு காப்புறுதி, வங்கிச் செயன் முறைகள் போன்றவை தொடர் பான தடைகளுக்கு தாண்டப்பட வேண்டும் எனவும் அவர் தெரி வித்தார்.

நாட்டில் பெற்றோலுக்கு தட் டுப்பாடு கிடையாது. போதிய கையிருப்பு உள்ளதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதி காரி சில்வா தெரிவித்துள்ளார்.

லங்கா இந்திய எண்ணெய்க் கம்பனி பெற்றோல் விலையை அதிகரித்தாலும் இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனம் பெற் றோல் விலையை அதிகரிக் காது. லங்கா இந்திய எண் ணெய்க் கம்பனி சந்தையில் 5 சதவீத பங்கை மட்டுமே கொண் டுள்ளது. இதனால் பெரிய தாக் கம் ஏற்படப்போவதில்லையென வும் சில்வா தெரிவித்துள்ளார்.

# பிரச்சினைகளுக்கு பதில் வழங்காது பூச்சாண்டி காட்டும் அரசியல்

(கொழும்பு)

பிரச்சினைகளுக்கு பதில் வழங்குவதற்கு பதிலாக பூச்சாண்டி காட்டும் அரசியலை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என முன் னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை விரிவுரையாளர் கள், மாணவர்கள் மேற்கொண்ட இரண்டு பேரணிகள் நடைபெற்றன. அந்த பேரணிகள் இரண்டும் முடிந்த மறுதினமான 29 ஆம் திகதி அரசாங்கத்தின் ஊடக செய்திகள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளில் முன்னிலை சோசலிசக் கட்சி மீது குற்றம் சுமத்தும் படலம் ஆரம் பிக்கப்பட்டது. விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் பேரணி, ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் திட்டத்தின் கீழ் நடைபெறுவதாக அவர்கள் கூறுகிறனர். இது அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சூழ்ச்சி எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மாதகல் கடற்தொழிலாளர்களுக்கு விரைவில் சரியான தீர்வு கிடைக்கும்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாதகல் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த மேற்படி சங்கங்களின் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக எடுத்து விளக்கினர்.

கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி விரைவில் நியாயமான நடைமுறைச் சாத்தியமான முறையில் உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவா உடனிருந்தார்.

# குன்றும் குழியுமான பாடசாலை வீதி

(வரணி),

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாக சேதமடைந்துள்ளது.

இவ்வீதி கற்கள், தார் ஊற்றப்படாத நிலையில் கடந்த காலத்தில் வெள்ளைக்களி மண் பறிக்கப்பட்டு இருந்தது.

இதனால் மழை காலத்தின் போது மாணவர்கள் மற்றும் பயணிகள்சறுக்கி விழுவதுமான அவல நிலை ஏற்பட்டது.

மாசேரி மக்களின் வாழைத் தோட்டப் பாதை மூடப்பட்ட நிலையில், இவ்வீதியால்தான் அப்பிரதேச மக்களும் பயணிக்க வேண்டியுள்ளது.

இவ்வீதி கற்கள், தார் ஊற்றப்படாத நிலையில் கடந்த காலத்தில் வெள்ளைக்களி மண் பறிக்கப்பட்டிருந்தது.

இதனால் மழை காலத்தின் போது மாணவர்கள் மற்றும் பயணிகள் சறுக்கி விழுவதுமான அவலநிலை ஏற்பட்டது.

இவ்வீதியில் பாடசாலை, முன்பள்ளி, கிராம அலுவலர் அலுவலகம், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் போன்றன அமைந்துள்ளதால் இவ்வீதியை கற்கள் இட்டு தார் ஊற்றி சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்புச் செய்ய முன்வர வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# யாழ் – நுணாவில் வழிப்பேருந்து சேவையை சீராக்குமாறு மக்கள் கோரிக்கை

(சுன்னாகம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நுணாவில், மட்டுவில், கனகம் புளியடி ஊடாக கொடிகாமம் வரை சேவையிலீடுபடும் 794 இலக்க பேருந்து சேவை சீரின்மையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது காலை, மாலை ஒரு தடவை மட்டுமே இப்பேருந்து சேவையில் ஈடுபடுவதால் ஏனைய நேரங்களில் யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமம் போன்ற பிரதேசங்களுக்கு செல்வதற்கு மட்டுவில், நுணாவில், மீசாலை மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், நீண்டதூரம் நடந்து ஏ - 9 வீதியை அடைந்து போக்குவரத்து செய்ய வேண்டி உள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே பொது மக்களின் நலன் கருதி இப்பாதையூடான சேவையினை சீரமைக்குமாறு உரியவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (148)

# மனைவியின் தற்கொலை வழக்கு சந்தேக நபருக்கு பிணை

(திருநெல்வேலி)

மனைவியின் தற்கொலைக்குக் காரணமாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் யாழ்.மேல்நீதிமன்றத்தினால் கடந்த செவ்வாய்க் கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சுன்னாகம் - பருத்தியோடை - கந்தரோடையைச் சேர்ந்த இராசதுரை விநாயகமூர்த்தி என்பவர் தனது மனைவியான விநாயகமூர்த்தி பவிதா தற்கொலை செய்வதற்கு தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்ட போது “நீ சாவதானால் சா” எனக்கூறியதால் குற்றவியல் தண்டனைச்சட்டக் கோவையின் பிரிவு 299 இன் கீழ் மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடிய குற்றவியல் தவறொன்றைப் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சுன்னாகம் பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவரைப் பிணையில் விடுவிக்கும் பொருட்டு இவரது சட்டத்தரணி கணதீபனால் யாழ்.மேல்நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் அரச தரப்பு சட்டத்தரணியும், பொலிஸாரின் அவதானக்குறிப்புக்களின் பிரகாரம் இப்பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இதனையடுத்து சந்தேக நபரை தலா 2 இலட்சம் பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்வதற்கு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் அனுமதி வழங்கினார். அத்துடன் ஒவ்வொரு மாதக் கடைசியிலும் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகிக் கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (137)

# மாதாந்த சிறப்புரை

(தும்பளை)

புலோலி அறிவோர் ஒன்று கூடல் மாதாந்தம் நடத்தும் இலக்கியச்சந்திப்பில் இம்முறை நாளை மறுதினம் பிற்பகல் 4.00 மணியளவில் ஆங்கிலப் பேராசான் ஆ.கந்தையா “ஒப்பியல் இலக்கியம்” என்னும் பொருள் பற்றி சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் படப்பியல் துறை சார்ந்த அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (62)

# சபை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

நிதி அமைச்சினால் உறுப்பினர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்தியஸ்த சபை நடைபெறமாட்டாது என சபை தவிசாளர் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் வழமை போல் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என சபை தவிசாளர் மேலும் அறிவித்துள்ளார்.



புலமைப்பரிசில் பரீட்சையின் போது காரைநகர் கல்விக்கோட்டத்தில் சித்தியடைந்த 12 மாணவர்கள் காரைநகரில் இயங்கும் தனியார் கல்வி நிலையத்திலும் கல்வி பயின்ற நிலையில், அந்நிலையத்தினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இதன் போது கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் கல்வி நிலைய சமூகத்தினர் நிற்பதைக் காணலாம். (50)

# முரசின் இன்றைய பலன்

(05.10.2012 – வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி.
நட்சத்திரம் ரோகினி மரணயோகம் பின்னிரவு 3.45 வரை.
திதி பஞ்சமி பிற்பகல் 5.30 வரை. பின் சஷ்டி.
இராகுகாலம் 10.32 - 12.02 வரை. சுபநேரம் 6.02 - 7.32 வரை.
எமகண்டம் 3.02 - 4.32 வரை. குளிகன் காலம் 7.32 - 9.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் சோர்வு. தொழில் சிறக்க உதவி கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். உடல்நலத்திற்கு சிகிச்சை. விலைமதிப்புள்ள பொருள் வாங்குவீர்கள். |
| ரிஷபம் | மனதில் அன்பும், கருணையும். உதவிகள் செய்வீர்கள். தொழில் தடைவிலகும். கொடுக்கல், வாங்கல் சீராகும். இல்லறத்துணை அனுசரணை. |
| மிதுனம் | செயல்திறன். நண்பர், உறவினர் வியக்கும் வகையில் வேலைகள் செய்வீர்கள். ஆதாயம் கிடைத்து குடும்பத் தேவை நிறைவேறும். உடல் நலம் சீராகும். |
| கடகம் | எதிர்காலம் சிறக்க உதவும் பணி. உதவி கிடைக்கும். தொழில் இலக்கு நிறைவேறும். செலவுக்குரிய பணம் வரும். வெளியூரிலிருந்து நற்செய்தி. |
| சிம்மம் | வெற்றி வந்து சேரும். நண்பர்களிடமிருந்து தைரியம். தொழில் வளர வாய்ப்பு. சராசரி பணவரவு. கடன் தீரும். போக்குவரத்தில் கவனம் நல்லது. |
| கன்னி | விமர்சனங்கள் வரும். உங்கள் போக்கில் மாறுபடாமை நல்லது. கூடுதல் உழைப்பு. செலவு அதிகம் இருக்கும். வேலையிடத்தில் உளைச்சல். பயணத்தில் கவனம். |
| துலாம் | பிரச்சினைகளுக்கு ஒதுங்குவது நல்லது. உழைப்பு. தொழில் சிறக்கும். பணவரவு தாராளம். உடல் நலத்தில் கவனம். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். |
| விருச்சிகம் | மனமும், உடலும் புத்துணர்வு. தேங்கிய செயல் நிறைவேறும். தொழிலில் அனுகூலம். உபரி வருமானம். புதிய நண்பர் அறிமுகம். விருந்து உபசரிப்பு. |
| தனுசு | பிறர் மனதில் இடம் பிடிப்பீர்கள். சுறுசுறுப்பு. முடியாத செயல்களும் முடியும். தொழில் வளர்ச்சி நிலை. சராசரி பணவரவு. நட்பு மேலோங்கும். |
| மகரம் | பலநாள் தேவை நிறைவேறும். தொழிலில் மாற்று உபாயம். உழைப்பு உதவும். முக்கிய செலவு இருக்கும். போக்குவரத்தில் கவனம். வெகுமதிகள் கிடைக்கும். |
| கும்பம் | நன்றி மறந்த செயல் கண்டு வருத்தம். தொழில் முன்னேற்றம். எதிர்பார்த்த பணவரவு. குடும்ப ஆதரவு கூடுதல் நம்பிக்கை தரும். உறவினர் வருகை. |
| மீனம் | பிறர் நலனில் அக்கறை. தொழில் வளர்ச்சி இருக்கும். பணவரவும், நன்மையும் கூடும். குடும்பத்தேவை நிறைவேறும். நண்பர் நலம் விசாரிப்பர். |

# டோனியின் தேர்வே தோல்விக்குக் காரணம்


(கொழும்பு)



டோனியின் அணித் தேர்வே ருவென்ரி-20 சூப்பர் 8 ஆட்டங்களுடன் இந்திய அணி வெளியேறக் காரணம் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் தெரிவித்தார். ருவென்ரி-20 போட்டியில் இந்தியா விளையாடிய 5 ஆட்டத்தையும் பார்த்தேன். இதில் ஒவ்வொரு போட்டியிலும் கப்டன் டோனி சரியான அணியை தேர்வு செய்யவில்லை. 11 பேர் கொண்ட அணி வீரர்கள் தேர்வு முறை சரியானதாக இல்லை. உதாரணத்துக்கு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் விக்கெட்டுகளைக் கைப்பற்றக்கூடிய ஹர்பஜன் தேவை. ஆனால் அவரைத் தேர்வு செய்யவில்லை.

இந்தியாவின் பலமே துடுப்பாட்டம்தான். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடவில்லை. தென்னாபிரிக்காவுக்கு எதிராக 1 ஓட்டத்தால் வெற்றி பெற்றது அதிர்ஷ்டமே. ருவென்ரி-20 போட்டிக்கு ஏற்ற உடல் தகுதியுடன் சகீர்கான் இல்லை. இந்தப் போட்டிக்கு அவரை தேர்வு செய்யும் முன்பு அவரிடம் விளையாட விருப்பமா? என்று கேட்டு இருக்க வேண்டும். இந்திய அணியில் வேகப்பந்து வீச்சுக்கு இளம் வீரர்கள் தேவை. உமேஷ் யாதவ், வருண் ஆரோன் போன்ற இளம் வீரர்கள் இந்திய அணிக்குத் தேவை. தற்போது புதிதாக தேர்வு செய்யப்பட்ட இந்திய தேர்வுக்குழு இளம் வீரர்களான உமேஷ் யாதவ், வருண் ஆரோனுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஊருக்குப் போகின்றோம் சாமி!



உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரிலிருந்து இந்திய அணி வெளியேறியதைத் தொடர்ந்து அவ்வணியின் வீரர்களைக் கிண்டலடிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் வித்தியாசமான படங்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு வித்தியாசமான படமே இது.

# ஸ்பெயின் தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ள புதிய நிரல்படுத்தலின் பிரகாரம் ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி ஆகிய அணிகள் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களில் தொடர்ந்தும் நீடிக்கின்றன. நான்காம் இடத்திலிருந்த போர்த்துக்கல் 3 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளதுடன், 3 ஆம் இடத்திலிருந்த இங்கிலாந்து 5 ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

ஆர்ஜென்ரினா 7 ஆம் இடத்திலிருந்து நான்காம் இடத்திற்கும், 8 ஆம் இடத்தில் இருந்த நெதர்லாந்து 6 ஆம் இடத்திற்கும் முன்னேற்றம் கண்டுள்ளன. உருகுவே மற்றும் இத்தாலி ஆகிய அணிகள் முறையே 7 ஆம் மற்றும் 8 ஆம் இடங்களுக்கு பின்தள்ளப்பட்டுள்ளன. 10 வருடங்களின் பின்னர், முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ள கொலம்பியா 22 ஆம் இடத்தில் இருந்து 9 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

# மட்டுவில் சோமாஸ்கந்த முன்பள்ளியின் விளையாட்டு

(சாவகச்சேரி)

மட்டுவில் மத்தி சோமாஸ்கந்த முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் தலைவர் சி. இராமச்சந்திரன் தலைமையில் நாளை மாலை 2.30 மணிக்கு நடைபெற்றும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் வே. கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் செ. சிவசுப்பிரமணியம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பா. நிமலதாஸன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், பெற்றோர், விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டுமாறு முன்பள்ளி ஆசிரியர் செல்வி த. மாலதி கே[illegible]டுள்ளார்.

(இ)

# இரண்டு வருடத் தடை



இங்கிலாந்தில் சோம்செட் கவுண்டி அணிக்காக விளையாடிய பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரகுமான் கனாபிஸ் என்ற ஊக்கமருந்து உட்கொண்டது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு 3 மாதங்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர் ஆட்டத்திறனை வளர்க்க போதைமருந்தை உட்கொள்ளவில்லை, ஜாலிக்காக அதனை சாப்பிட்டிருக்கிறார் என்பது தெரியவந்ததால் குறைந்த தண்டனையுடன் தப்பியிருக்கிறார்.

# நியூசிலாந்துக்குள் உள்நுழையத் தடை



முன்னாள் ஹெவி வெயிட் சம்பியனும் அமெரிக்காவின் பிரபல குத்துச்சண்டை வீருமான மைக்டைசன் நியூசிலாந்துக்குள் நுழையத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பாலியல் புகாரில் அவர் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனைப் பெற்றவர் என்பதால் தடை விதிக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்தில் உள்ள லைப் எஜுகேசன் அறக்கட்டளை சார்பில், வரும் நவம்பரில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் அவர் பங்கேற்பதாக இருந்தது. இதற்காக பிரதமர் ஜோன் கீயின் எதிர்ப்பையும் மீறி அவருக்கு விசா வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த விசாவும் இப்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்நாட்டு குடியேற்றத் துறை இணையமைச்சர் காடே வில்கின்சன் கூறுகையில், டைசனின் ஆதரவு தங்களுக்குத் தேவையில்லை என்று அறக்கட்டளையே கூறிவிட்டதால் விசா இரத்துச் செய்யப்பட்டுவிட்டது. அவருக்கு எந்த அடிப்படையில் விசா வழங்கினார்கள் என்று தெரியவில்லை. பெண்களுக்கு எதிரான குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு விசா வழங்க ஒரு போதும் நான் அனுமதியளிக்கவில்லை என்றார்.

1992 ஆம் ஆண்டு 18 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக மைக் டைசனுக்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்ற ஒருவருக்கு விசா வழங்குவதை நியூசிலாந்து சட்டம் அனுமதிக்காது.

# பரிசுத் தொகை அதிகரிப்பு




(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸில் வழங்கப்படும் பரிசுத் தொகை உயர்த்தப்பட்டது.

அவுஸ்ரேலிய ஓப்பன் கிராண்ட்லாம் தொடரில் கிடைக்கும் அதிக வருமானத்தில், வீரர்களுக்கு கொடுக்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் எனக் கோரிக்கை எழுந்தது. இது மறுக்கப்படும் பட்சத்தில், 2013இல் இத்தொடரைப் புறக்கணிக்க இருப்பதாக பல முன்னணி வீரர், வீராங்கனைகள் தெரிவித்தனர்.

இவ்விடயத்தில், அவுஸ்ரேலிய ரென்னிஸ் சங்கம் தற்போது பணிந்துள்ளது. இதுகுறித்து ரென்னிஸ் சங்கத்தின் தலைமை அதிகாரி ஸ்டீவ் உட் கூறியதாவது;

ரென்னிஸ் வீரர், வீராங்கனைகள் நன்மைக்காக அவர்களே நம்ப முடியாத அளவில், அவுஸ்ரேலிய ஓப்பன் பரிசுத் தொகையை உயர்த்த வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தோம். கடந்த ஆண்டு வழங்கியதை விட, இம்முறை ரூ. 21.5 கோடி அதிகரித்து மொத்தம் ரூ. 163 கோடியாக உயர்த்தியுள்ளோம். இதை அறிவிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம் எனத் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

**இரண்டாவது அரையிறுதி**

மேற்கிந்தியத்தீவு –அவுஸ்ரேலியா

இரவு 7.00 மணி


கொழும்பு பிரேமதாச விளையாட்டு அரங்கு

# மலேசிய ஓப்பன் மொனாக்கோ சம்பியன்

மலேசிய ஓப்பன் ரென்னில் தொடரில் மொனாக்கோ சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் மலேசிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் நடந்துவந்தன. ரோஜர் பெடரர், ரபேல் நடால், நோவக் ஜோகோவிச் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இத்தொடரில் பங்கேற்காவிட்டாலும், டேவிட் பெரர் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்றதால் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன. இத்தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் டேவிட் பெரரை வீழ்த்தி, 11ஆம் நிலை வீரரான ஆர்ஜெண்ரீனாவின் ஜுயான் மொனாக்கோ இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இந்நிலையில் இறுதிப்போட்டியில் மொனாக்கோ, 34ஆம் நிலை வீரரான பிரான்சின் ஜூலியன் பென்னட்டியூவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 7–5, 4–6, 6–3 என்ற செட் கணக்கில் பென்னட்டியூவை வீழ்த்தி மொனாக்கோ சம்பியன் பட்டம் வென்றார்.

# கனவு நிறைவேறியதில் மகிழ்ச்சி

(கொழும்பு)



இங்கிலாந்து அணியில் நான் விளையாடும் போது வளர்ந்துவரும் எனது மகள் பார்க்கவேண்டும் என்பது எனது கனவு. அந்தக் கனவு நிறைவேறியிருப்பதில் மகிழ்ச்சி என கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கெவின் பீற்றர்சன், கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது அப்போதைய இங்கிலாந்து அணியின் கப்டன் ஸ்ரோஸ், பயிற்சியாளர் ஆன்டி பிளவர் ஆகியோருக்கு எதிரான கருத்துகளை டிவிட்டர் மூலம் தென்னாபிரிக்க வீரர்களுக்கு அனுப்பினார். இதனை பீற்றர்சன் விசாரணையில் ஒப்புக்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவரை அணியில் இருந்து நீக்கிய இங்கிலாந்து கிரிக்கெட் சபை, அவரது ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்தது.

இதனை அடுத்து பீற்றர்சன் இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் பகிரங்க மன்னிப்பு கேட்டார். இருப்பினும் அவர் அணியில் சேர்க்கப்படவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கும், பீற்றர்சனுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. இந்த பேச்சுவார்த்தையில் 3 மாதத்துக்கு பின்னர் சுமூகத் தீர்வு ஏற்பட்டுள்ளது. பீற்றர்சன், ஸ்ரோஸ்சிடம் வருத்தம் தெரிவித்ததால் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது. இனிவரும் தொடர்களில் இங்கிலாந்து அணியின் தேர்வுக்கு பீற்றர்சன் பெயர் கருத்தில் கொள்ளப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விரைவில் நடக்க இருக்கும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி தொடரில் பீற்றர்சன் அணியில் இடம் பிடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அணிக்குத் திரும்புவது குறித்து பீற்றர்சன் இலங்கையில் அளித்த பேட்டியில், நடந்த சம்பவத்துக்காக இங்கிலாந்து அணி வீரர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். பிரச்சினை முடிவுக்கு வந்து மீண்டும் அணிக்குத் திரும்புவது மகிழ்ச்சி அளிக்கிறது. 2015ஆம் ஆண்டு உலக கோப்பை வரையிலோ அல்லது எனது உடல் நிலை அனுமதிக்கும் வரையிலோ 3 வகையிலான ஆட்டங்களிலும் விளையாடுவேன். நான் இங்கிலாந்து அணிக்காக விளையாடுவதை வளர்ந்துவரும் எனது மகள் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# புதிய பயணம்: முன்னேற வாழ்த்துக்கள்



படப்பிடிப்பு: சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட மைலோக் கிண்ண ரக்பி போட்டித் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி காலிறுதியுடன் வெளியேறியுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் மைலோ நிறுவனத்தினால் தேசிய மட்ட பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ரக்பி போட்டி கடந்த 29, 30ஆம் திகதிகளில் கொழும்பு பிலியந்த மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து சென். ஜோன்ஸ் கல்லூரி பங்குபற்றச் சென்றது. முதலாவது போட்டியில் இகல செல்துவ மகாவித்தியாலய அணியை எதிர்கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 10 - 0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவதுப் போட்டியில் றவட்டவத்த மெதடிஸ்த மகாவித்தியாலய அணியை எதிர்கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 5-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் மொறாட்டுவ மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்கொண்டது. இதில் சிறப்பான ஆட்டத்தை இரு அணி வீரர்களும் வெளிப்படுத்தியிருந்தன. இறுதியில் 12-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியுற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டு வரலாற்றில் முதன் முறையாக ரக்பி அணி ஒன்றை உருவாக்கி அதனை தேசிய மட்டப் போட்டிக்கு அனுப்பிய பெருமை சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்றிருப்பது சகல விளையாட்டுத்துறையையும் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், ரக்பி அணியினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு மேலும் இப்போட்டி நுணுக்கங்களை விரைவில் கற்று தேசிய, சர்வதேச மட்டப் போட்டிகளிலும் மிளிர வேண்டும் என விளையாட்டு ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# கொரியா உதவி


2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கிண்ணப் போட்டியை நோக்காகக் கொண்டு கொரிய அரசாங்கத்தினால் 20,000,000 அமெரிக்க டொலர் செலவில் 25 நாடுகளில் நடைபெறும் கொரிய அனுசரணையுடனான போட்டிகளுக்கான இலங்கையின் ஜூடோ மற்றும் டைகொண்டோ விளையாட்டுக்குத் தேவையாக உபகரணங்களை தேசிய ஒலிம்பிக் அரங்கில் கொரிய தூதுவர் ஜொங்மூன் சொயினால் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவிடம் வழங்குகினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் டைகொண்டோ சங்கத்திற்கு வழங்கினார். இந்நிகழ்வில் தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் மெக்ஸ்வெல் த சில்வா மற்றும் விளையாட்டு சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறுகையில்: விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கம். அந்த வகையில் கொரிய நாட்டுக்கு எமது நன்றிகள்.

நாங்கள் கிராம ரீதியாக வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க பல திட்டங்களை தயாரித்திருக்கின்றோம். அதன் அடிப்படையில் கால்பந்தாட்ட வீரர்களைத் தேர்வு செய்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் எமது செயற்பாடு திருப்திகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றார்.

# வீரர்களை இணைக்கும் திட்டம் வவுனியாவில் விசேட கூட்டம்



(வவுனியா)

தேசிய மட்ட உதைப்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போட்டிகள் தொடர்பான கூட்டம் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில நடைபெற்றது.

இம்மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள வடமாகாண, மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள்தொடர்பாகவும் கால்பந்தாட்ட போட்டிகள் தொடர்பாகவும் விரிவாகஆராயப்பட்டது. வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு பயிற்றுநர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (93)

## பாடசாலைகள் விளையாட்டு சங்கத்திற்கு நிதி அன்பளிப்பு

(சுன்னாகம்)

பாடசாலைகள் விளையாட்டை அபிவிருத்தி செய்யும் வகையில் லண்டனில் இயங்கும் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தினால் நிதி அள்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் 210,000 ரூபாவிற்கான காசோலை வழங்கப்பட்டது.

இக்காசோலையானது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின் போது யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்க உறுப்பினர் ப. தர்மகுமாரிடம் டி. எட்வின் குணரட்ணத்தினால் வழங்கப்பட்டது.

இச்சங்கமானது உருவாக்கப்பட்டு ஒரு வருடத்தை கடந்த நிலையில், எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு நிதிவசதி இன்றி இருந்ததனால் தற்போது ஊக்குவிக்கும் முகமாக இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் வடமாகாண ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் இச்சங்கத்தினால் நடத்தப்படவுள்ளன. மேற்படி நிதி இப்போட்டியை சிறப்புற நடத்த பெரும் துணைபுரியும் என மேற்படி சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது. இது போன்ற உதவிகள் தொடர்ந்து கிடைக்கப்பெற்றால் விளையாட்டுத் தரத்தை மேலும் உயர்த்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

## பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கால்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளது.

கால்பந்துப் போட்டியை வளர்க்கும் நோக்கில் பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வருவது வழமை.

இந்த வகையில், இந்த வருடத்தின் இறுதிப் பகுதி நெருங்கி வரும் நிலையில் சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இப்போட்டிகள் வயதுப் பிரிவு அடிப்படையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் நேற்றுமுன்தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், சென். அன்ரனீஸ் கல்லூரி அணிக்குமிடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி மூன்று வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதேவேளை, நேற்றைய தினம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்றது. (எஸ்.பி.)

## தேசிய மட்ட தடகளம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலானதேசிய மட்ட தடகளப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை சிறப்புற நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் பாடசாலை மெய்வல்லுநர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, யாழ். மாவட்ட பாடசாலை வீரர்கள் இப்போட்டிக்குத் தயாராகும் வகையில் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமையை அதவானிக்க முடிகின்றது.

பெருவிளையாட்டில் சாதனை படைத்தது போன்று தடகளப் போட்டிகளில் சாதனை படைக்க வாழ்த்துவதாக விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி)

# யாழ். பிரதேச செயலகத்தில் சென். மேரிஸ் அணி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்திற்குபட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சென். மேரிஸ் அணி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டு அமைச்சும் இணைந்து தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்டப் போட்டிகள் பிரதேச ரீதியாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 24ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. எட்டு அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு பாடுமீன் அணியும், சென். மேரிஸ் அணியும் தகுதிபெற்றன.

இந்நிலையில் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். துயைப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மிகவும் விறுவிறுப் பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணி களும் ஒன்றுகொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டயுக்தியை வெளிப்படுத்தியிருந்ன.

இருப்பினும், சென். மேரிஸ் அணி வீரர்கள் மிகவும் சாதூரியமான முறையில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியதுடன் பரபரப்பான நிலையை அடைந்திருந்தது.

பாடுமீன் அணி வீரர்கள் கோல் போடும் முயற்சியை மேற்கொண்டு தமது ஆட்டவேகத்தை அதிகரித்தனர். சென். மேரிஸ் அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தால் பாடுமீன் அணியின் முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காதுபோனது. இறுதியில் சென். மேரிஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று யாழ்ப்பாண பிரதேசத்தில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, இப்பிரதேசத்திற்கான 20 பேர் கொண்ட வீரர்கள் தெரிவு உரிய அதிகாரிகள் தலைமையில் விரைவில் மேற்கொள்ளப்படும் என யாழ்ப்பாண பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். (எஸ்.பி.)

# ஜெயகாந்தன் பற்றி

**ஃப்ரொண்ட் லைன் சஞ்சிகையில்...**

ஆறு தசாப்தங்களுக்கு மேலான தனது இலக்கியப் பணியில் ஜேகே என்று நண்பர்களாலும் மற்றும் தோழர்களாலும் அழைக்கப்படும் தனபாண்டியன் ஜெயகாந்தன், சமூக அநீதிகளுக்கும் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிராக தனது பேனாவை திறம்படக் கையாண்டதுக்காக உன்னத பாராட்டுக்களைப் பெற்றவர்.

ஈடற்ற பேச்சாளர், திரைப்படத் தயாரிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர், திறமையான பத்திரிகையாளர், மிகச் சிறந்த எழுத்தாளர் என்று இருந்தபோதும், செயற்பாட்டுக்கு அஞ்சாதவராக இருந்தார். உலக மட்டத்தில் ஜனநாயகத்தை நேசிப்பவர்கள், சமாதானம், சமத்துவம் என்பனவற்றை முன்னேற்றுவதற்காக உழைப்பவர்களுடன் கைகோர்த்துக்கொள்ள அவர் ஒருபோதும் தயங்கியதில்லை.

அது அரசியலோ அல்லது கலாசாரமோ எந்த அரங்கமானாலும் அவர் தனது கருத்துக்களை மிகவும் நேர்மையுடனும் மற்றும் இணையற்ற தீரத்துடனும் வெளிப்படுத்தினார். பரிசுகளும் பாராட்டுகளும் அவரை தேடி வந்தன. அவற்றிடையே ஜனாதிபதி விருது, சாகித்ய அகடமி விருது மற்றும் சோவியத் தேச நேரு விருது, ரஷ்ய நட்புறவு விருது மற்றும் பத்மபூஷண் என்பனவும் அடங்கும்.

1934இல் தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள மஞ்சக் குப்பம் கிராமத்தில் பிறந்த ஜெயகாந்தன், தனது தாயார் மற்றும் தாய்வழி மாமன்மார், அவருள் தேசப்பற்றினை ஊட்டி வளர்த்த ஒரு ஆரோக்கியமான சூழலிலேயே வளர்ந்தார். ஐந்தாம் வகுப்புடன் பாடசாலைக்கு செல்வதை நிறுத்திக்கொண்ட அவர், 1946இல் தனது பிறந்த ஊரை விட்டு வெளியேறி சென்னையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்துக்கு வந்து சேர்ந்தார்.

உண்மையில் அதுதான் அவரது பல்கலைக்கழகமாக மாறியது. உலக இலக்கியம், கலாசாரம், அரசியல், பொருளாதாரம் மற்றும் ஊடகவியல் போன்ற பல்வேறு துறைகளின் அறிவையும் அவர் அங்கு பெற்றுக் கொண்டார். அவரது கம்யூனிச வாழ்க்கையின்போது, தங்களது இலக்கியச் சேவைக்காக பாராட்டுக்களை பெற்றிருந்த கம்யூனிஸ்ட் பிரமுகர்களான ப.ஜீவானந்தம், ஆர்.கே. கண்ணன், எஸ்.இராமகிருஸ்ணன் போன்றவர்களுடனான அவரது கூட்டு, இலக்கிய உலகத்தினுள் அவரது நுண்ணறிவு செழிப்படைய உதவியது.

கம்யூனிசத்தின் இளம் அங்கத்தவரான ஜெயகாந்தன் ஒரு முழுமையான எழுத்தாளராக வெளிப்பட ஏழு ஆண்டுகள் மட்டுமே பிடித்தன. அவரது முதலாவது சிறுகதை 1953இல் வெளியானது. அந்தக் கணத்திலிருந்து அவர் ஒருபோதும் பின் திரும்பிப் பார்க்காத அளவுக்கு எழுதிக் குவித்தார். விளிம்புநிலை சமூகத்தினரின் வாழ்க்கையையும் அவர்களது போராட்டங்களையும் அவர் தனது கதைகளினூடாக வெளிச்சத்துக்கு கொண்டுவந்தார். அதற்குப் பின்னான குறுகிய காலத்தில் பிரபலமான தமிழ் வார இதழ்கள், ஏனைய எழுத்தாளர்களால் வெளிக்காட்டாமல் விடுபட்ட மத்திய தர வகுப்பினர் மற்றும் உயர்வர்க்கத்தினரின் அநேக பிரச்சினைகளை விரிவாகத் தொட்டு எழுதுவதற்கு இந்த எழுத்தாளருக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டன.

மனித உறவுகளை கையாண்டு அவர் எழுதிய பிரபலமான முத்தொகுப்பு, அக்கினிப் பிரவேசம், சில நேரங்களில் சில மனிதர்கள் மற்றும் கங்கை எங்கே போகிறாள் என்பனவாகும். ஊருக்கு நூறு பேர், கைவிலங்கு போன்றவைகளில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் சிறை வாழ்க்கை பற்றிய அவரது நுணுக்கமான விவரிப்புகளுடன் கூடிய எழுத்துத் திறமை பளிச்சிட்டது. மரணம் ஒரு தண்டனை அல்ல, எனவே மரண தண்டனை வழங்குவதை நிறுத்த வேண்டும். தண்டனை குற்றச் செயல்களை குறைக்க உதவாது என்கிற அவரது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். அதுபோல, சோவியத் யூனியனின் உடைவு சோசலிசத்துக்கு ஒரு பின்னடைவுகூட இல்லை. நாங்கள் சரியான பாடங்களை பெற்றுக் கொள்வோமானால், அந்த மாற்றங்கள் அவசியமானவைகளாகவே கருதப்படும் என்றும் கூறுகிறார்.

எழுதுபவர்கள் குறித்து இப்படியான ஒரு பார்வையை முன்வைக்கிறார்: **“எழுத்தாளரிடம் விரிவான கண்ணோட்டம் இருக்க வேண்டும். தற்சமயம்**



**நிலவும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளை பற்றிய ஒரு முழுமையான புரிந்துணர்வு அவரிடம் இருக்கவேண்டும். சகல காரணிகளையும் அவர் ஒரு சீரான வழியில் மதிப்பிட வேண்டும். ஒரு காட்சியை மட்டும் தெரிந்தெடுக்கும் பண்பு தவறானது. யதார்த்தமான அணுகுமுறை அவசியமாகிறது. இதற்கு ஆரோக்கியமான இலக்கிய விமர்சனமும் மற்றும் கருத்துப் பரிமாற்றமும் தேவைப்படுகிறது. எழுத்தாளர் ஓர் ஒற்றைப் பிரச்சினையை தொடும்போதும், அவரது எழுத்துத் தொழில் ரீதியான அர்ப்பணிப்போடு துணிந்து இறங்கவேண்டியது அவசியம். ஆனால் அப்போது அவர் ஏனைய சமூகப் பிரச்சினைகளையும் பார்வைகளையும் அதனுடன் தொடர்பு படுத்துதல் வேண்டும். இதைத்தான் நான் சமூக - ஆன்மீக அணுகுமுறை என அழைக்கிறேன். நீங்கள் உங்கள் பணியை தனிப்பட்ட ஓராளில் இருந்து ஆரம்பிக்கலாம், ஆனால் ஒரு எழுத்தாளர் என்கிற வகையில் பெரிய சமூக யதார்த்தத்தின் ஒரு பகுதியாக நீங்கள் அதனை காண முடியும்...”**

ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள், ஒரு இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள் மற்றும் யோசிக்கும் வேளையில் போன்ற அவரது கதையல்லாத எழுத்துப் பணிகளும் பிரமாண்ட அளவில் வாசகர்களின் வரவேற்பைப் பெற்றவை. 1964இல் அவரது முன்னோடிகளில் சிலரைப் போல இந்த பிரசித்தி பெற்ற எழுத்தாளரும் திரையுலகத்துள் பிரவேசித்தார். அங்கு அவர் திரைக்கதை எழுத்தாளர், இயக்குநர் போன்ற பல்வேறு பாத்திரங்களையும் ஏற்றார். உன்னைப் போல் ஒருவன் என்கிற அவரது முதல் படம் சிறந்த படத்துக்கான ஜனாதிபதியின் சான்றிதழைப் பெற்றது.

அவர் எழுதிய 200இற்கு மேற்பட்ட சிறுகதைகள், 45 நாவல்கள் மற்றும் குறுநாவல்கள், 20 கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் திரைக்கதை எழுதிய 10 திரைப்படங்கள் என்பன அவரது படைப்பாக்கத்துக்கும் மற்றும் சித்தாந்த செயல்பாடுகளுக்கும் சான்று பகர்கின்றன. எழுதுவதன் மூலம் எதிர்த்து போராடுவது மட்டுமன்றி ஒரு சமூக ஆன்மீக அணுகுமுறையின் தேவையை வலியுறுத்தும் அவர், அந்த அணுகுமுறை மார்க்சியத்துடன் விரோதமானதாக இல்லை என்றும் வாதிடுகிறார். இந்த வருடம் ஏப்ரல் 24இல் ஜெயகாந்தன் 78ஆவது அகவை அடைந்துள்ளார்.

# கற்க கசடற!

**- குமார் கணேசன் -**

ஒரு வளமான நிலத்தைத் தேர்ந்தெடுத்து, அதைப் பக்குவப்படுத்தி, நல்ல காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் கிடைக்குமாறு ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டு, வீரியமுள்ள விதைகளை விதைக்கிறோம்.

அவை முளைத்து, பின் வளர வளர அவற்றிற்குத் தேவையான உரமும், நீரும் வழங்குவதோடு பாதுகாப்புக்கு வேலி அமைத்து அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பிற களைகளைப் பிடுங்கி, நோயுற்றால் மருந்து தெளித்து, கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறோம்.

நாம் விதைத்த விதைகள் மலர்களாகி, காய்த்துப் பின் பல விதைகளை அல்லது கனிகளை ஒரு குறிப்பிட்ட காலத்தில் நன்றியோடு தருகின்றன.

ஒவ்வொன்றுக்கும் தன் தன்மைக்கேற்ப விளைகாலம் மாறுபடும். நெல்லுக்கு நாலு மாதம் என்றால் வாழைக்கு பயிரிடும் இடத்தையும் பயிரின் இனத்தையும் பொறுத்து, ஏழு மாதங்கள் வரை ஆகலாம்.

அதிகமாக உரத்தைப் போட்டோ, நீரைப் பாய்ச்சியோ, பாட்டுப் பாடியோ அல்லது அதைச் சுற்றி ஆடியோ, ஆறு மாதத்துப் பயிரை ஆறு நாளில் அறுவடை செய்ய முடியாது.


பயிர் இயற்கையாக வளரவேண்டும். அதன் நுனியைப் பிடித்து வேகமாக இழுத்து நீட்டிவிட முடியாது. அப்படி முயன்றால் பயிரின் உயிர்தான் போகும்.

மாணவர்களும் அப்படித்தான். அவர்களுக்கு, நல்ல வசதிகள் நிறைந்த பள்ளிக்கூடத்தில், அன்பும் அனுபவமும் நிறைந்த ஆசிரியர்களை வைத்து, பாடங்களைக் கற்றுக் கொடுக்கலாம்.

வீட்டிலும் அவர்களின் படிப்புக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். என்றாலும் அவர்கள்தான் கற்க வேண்டும். அவர்களுக்காக வேறு யாரும் கற்றுக் கொள்ளமுடியாது.

விதைகளுக்கும் மாணவர்களுக்கும் ஒரு மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. நெல்லின் விதை போட்டால் நெல்தான் கிடைக்கும், சோளம் கிடைக்காது.

ஆனால், மாணவர்கள் களிமண் மாதிரி. களிமண்ணைப் பதமாகப் பிசைந்து எந்த பொம்மையும் செய்யலாம் என்பது போல, எந்த ஒரு குழந்தையும், தேவையானவற்றைக் கற்றுக் கொண்டு, கலை, அறிவியல், பொருளாதாரம், வணிகம், பொறியியல், மருத்துவம் என எந்தத் துறையிலும் வல்லுனராக முடியும்.



ஆனால் வீரியமுள்ள விதைகளைத் தேர்வு செய்வது போல, ஒரு காலகட்டத்தில், எந்தக் குழந்தைக்கு எதில் விருப்பம் இருக்கிறது, எதில் திறமை இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டு படிப்பைத் தொடர வேண்டும்.


நம்பிக்கையே வாழ்க்கைதானே. முடியும் என நினைப்பதைத்தான் நம்மால் செய்ய முடியும்.

நம்மால் முடியும் என நினைத்தாலும், பல நேரங்களில் “உன்னால் முடியாது” என்ற எண்ணத்தைப் பிறர் நம் மீது திணிப்பதையும் அறிவோம்.

கற்க கசடற என்பது நாம் கற்பவற்றைக் குறையின்றி கற்பதோடு, நாம் குறையின்றி வாழவும் கற்க வேண்டும் என்பதைச் சொல்கிறது.

# ராமுவும் சோமுவும்

**ராமுவும் சோமுவும் உயிர் நண்பர்கள். ஒரு நாள் இருவரும் காட்டு வாக்கில் நடந்துகொண்டிருந்தனர். அப்போது ஒரு பயங்கர கரடி எதிரில் வந்தது. இருவரும் பயந்து ஓடத் தொடங்கினர். கரடி அவர்களை விடாமல் துரத்தியது. ராமு நண்பனை விட்டு ஒரு மரத்தின் மீது ஏறித் தப்பித்தான். சோமுவிற்கு மரம் ஏறத் தெரியாது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கட்டாந்தரையில் படுத்துக்கொண்டு இறந்தது போல் நடித்தான். கரடி அவன் முகத்தருகே முகர்ந்து பார்த்தது. பசியாற அவனைக் கடித்துத் தின்றது. மரத்தின் மீதிருந்த ராமுவைப் பார்த்து, "செத்தவர்களை நான் சாப்பிட மாட்டேன் என்று ஊரில் எவன் உளறியது?" என்று கேட்டுவிட்டு அகன்றது.**



# சினிமா சினிமா



"தாண்டவம்" இசையமைப்பாளர் ஜீ.வி. பிரகாஷின் 25 ஆவது படம். "விஜய் ஆண்டனி தனது 25 ஆவது படத்தில் கதாநாயகனாக நடித்து விட்டாரே... நீங்கள் எப்போது நடிக்கப் போகிறீர்கள்?" என பலரும் ஜீ.வி.பிரகாஷிடம் கேட்கிறார்களாம். பிரபல மான பாலிவுட் நடிகைதான் ஜோடி என்றால் நடிக்கத் தயார் என்று தட்டிக்கழித்து வந்தார் அவர். இப்போது இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் தயாரிப்பில் அவரது உதவியாளர் ராஜசேகர் இயக்கும் படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்கு சம்மதித்திருக்கிறார். இசை சம்பந்தமான கதையாம். ஜீ.வி.பிரகாஷிடம் "உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளர் யார்?" என்று கேட்டால் "வாகை சூட வா" படத்துக்கு இசையமைத்த ஜிப்ரான் என்கிறார்.


"தாண்டவம்" படத்திற்குப் பின், ஷங்கரின் "ஐ" படத்தில் நடிக்கும் எமி ஜாக்சன், ஹொலிவுட் படங்களில் பயன்படுத்தப்பட்ட, சில அதிநவீன ஆடையலங்காரங்களை, ஷங்கரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். இதனால், முந்தைய ஷங்கர் படங்களைவிட, இப்படத்தில் ஆடைகளுக்காக பெருந்தொகை செலவு செய்யப்பட இருக்கிறது.



"ஹொலிவுட் படங்களில் எல்லாம், 30 முதல், 35 வயதில் தான் நடிகைகள் நடிக்கவே வருகின்றனர். அதனால், நானும் என் 30 வயதில் "மிட் நைட் சில்ரன்ஸ்" படம் மூலம் அங்கு புதுமுக நடிகை போல் அறிமுகமாகி றேன்" என்கிறார் ஸ்ரேயா. "திருமணம் எப்போது?" என்று கேட்டால், "30 வயதில் என்ன திருமணம்? இன்னும் சினிமாவில் சாதிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது..." என்கிறார்.

"தங்க மீன்கள்" படத்தை தயாரிக்கும், இயக்குநர் கவுதம் மேனன், அப்படத்தை இயக்கும், ராமையே ஹீரோவாக்கி விட்டார். அத்தோடு, வாய்ப்பின்றி இருக்கும் நடிகைகள் ரோகிணி, பத்மப்ரியா ஆகியோருக்கும் படத்தில் முக்கிய வேடம் கொடுத்திருக்கிறார்.

சிறந்த வெளிநாட்டுப் பிரிவுக்கான ஒஸ்கார் விருதுக்கு இந்தியாவில் இருந்து "பர்பி" என்ற ஹிந்திப் படம் செல்கிறது.



இந்தியாவில் இருந்து ஒஸ்காருக்கு அனுப்பப்படு வதற்காக பாலாஜி சக்திவேல் இயக்கிய "வழக்கு எண் 18/9", முருகதாஸ் இயக்கிய "ஏழாம் அறிவு" உட்பட 20 படங்கள் பரிசீலனை யில் இடம்பெற்றன. இதில் ரன்பீர் கபூர், பிரியங்கா சோப்ரா, இலியானா நடித்த "பர்பி" ஹிந்திப் படம் ஒஸ்கார் போட்டிக்குத் தேர்வாகி உள்ளது. சாப்ளினின் சிட்டி லைற் உட்பட பிரபலமான பிறநாட்டுப் படங்கள் பலவற்றின் காட்சிகளை அப்படியப்படியே இப்படத்தில் பிரதிபண்ணி காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படக் காட்சிகள் Copy-Paste என்ற தலைப்பில் இணையத்தில் வலம்வருகின்றன.

சினிமாவில் இருபது ஆண்டுகளை முடிக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். பலரின் இசைக் குழுவில் பணியாற்றிய ஏ.ஆர்.ரஹ்மான் 1992ஆம் ஆண்டு "ரோஜா" படத்தில் இசையமைப்பாளராக அறிமு கமானார். ரண்டு ஒஸ்கார் விருதுகள், கிராமி விருது, கோல்டன் குளோப் விருது, இந்திய தேசிய விருதுகள், மாநில விருதுகள், பிலிம் பேர் விருதுகள் என ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகள் இவர் இசைப் பயணத்தை அலங்கரிக்கின்றன. எந்த இந்திய இசையமைப் பாளரும் தொடாத சாதனை இது.



# பூமியை நோக்கி வரும் வால்நட்சத்திரம்




நிலவை விட 15 மடங்கு பிரகாசமான வால் நட்சத்திரம் ஒன்று பூமியை நோக்கி வர உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அடுத்த ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் தோன்றும் இந்த வால் நட்சத்திரத்திற்கு இஸ்கான் என்று பெயரிட்டுள்ளனர்.

இதனை பூமியிலிருந்து வெறும் கண்ணால் பகலில் காண முடியும். இந்த நட்சத்திரம் நிலவை விட 15 மடங்கு பிரகாசமாக இருப்பதால் இதைக் காண முடியும் என்று வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வால் நட்சத்தி ரத்தை ரஷ்யாவை சேர்ந்த வானியல் ஆய்வாளர்கள் அறிவியல் ஒப்டிகல் ஒருங்கிணைப்பு தொலைநோக்கி மூலம் கண்டுபிடித்துள்ளனர். இது இப்போது சூரியனின் வட்டப் பாதையில் 20 இலட்சம் மைல் தொலைவில் பரவளையத்தில் சுற்றி வருகிறது.

இந்த நட்சத்திரம் சூரியனின் வெளி வட்டப் பாதையில் உள்ள ஊர்ட் பகுதி யில் உருவானதாகக் கருதப்படுகிறது. இங்குதான் மிக அதிக அளவிலான உறைந்த குப்பை கூளங்கள் உள்ளன. இந்த வால் நட்சத்திரம் இப்போது வியாழன் கிரகத்தின் உள்வட்டப் பாதையை நோக்கி நகர்ந்து வருவதாகவும், அது அப்படியே படிப்படியாக பூமியை நோக்கி வரும் என்றும் நம்பப்படுகிறது. அழுக்குகள் நிரம்பிய ஐஸ்பந்தாக சுற்றிவரும் இஸ்கான் வால் நட்சத்திரம் நிலவை விட அதிக ஒளி யை உமிழ்ந்தபடி இருப்பதால் இதை பகல் நேரத்தில் வெறும் கண்ணால் காண முடியும். கடந்த நூறாண்டுகளில் இதுதான் மிகவும் பிரகாசமான வால் நட்சத்திரமாக இருக்கும் என வானி யல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலியர்களும் ஈழத்தவரும்

**- ராகவன் வலைத்தளத்தில் -**




ஈழத்தமிழர்களை இஸ்ரேலியர்களுடன் ஒப்பிட முடியாதென்பதற்கு பல காரணங்களுள்ளன. ஒன்று சொல்கிறேன்.

நான் டில்லியில் இருந்த சமயம் மாரெக் ஹால்டர் என்னும் யூத எழுத்தாளர் எழுதிய "அப்ரஹாமின் புத்தகம்" என்னும் புத்தகம் படிக்கக் கிடைத்தது. அருமையான பிரெஞ்ச் நடையில் அமைந்தது.

அப்புத்தகத்தின் கதை கி.பி. 70இல் தொடங்கி 1936இல் முடிவடைகிறது, அதுவும் ஒரே குடும்பத்தின் கதைதான் அது. அதில் யூதர்கள் அனுபவித்த எல்லா சோதனைகளும் அழகாகக் கையாளப்பட்டுள்ளன. 1940 களில் வார்ஸா யூதக்குடியிருப்பு அழிப்பு சமயத்தில் கதை முடிவடைகிறது. அதில் உள்ள ஒரு கதாபாத்திரம் இறக்க, "Ainsi mourut mon grandpère" (இப்படித்தான் இறந்தார் எனது தாத்தா) என்ற வாக்கியம் வர நான் எங்கோ குத்தி விட்டது போல நிமிர்ந்து உட்கார்ந்தேன். இக்கதைசொல்லியும் அக்குடும்பத்தின் உறுப்பினர் என்ற உண்மை முகத்தில் அறைந்தது.


அப்புத்தகம் பற்றி இன்னொரு சுவையான செய்தி. சமீபத்தில் 1991இல் நான் பிரெஞ்ச் மொழிபெயர்ப்பாளராக ஆக்ரா சென்ற போது அந்த பிரெஞ்சுக்காரர் மாரெக் ஹால்டர் எழுதிய "அப்ரஹாமின் குழந்தைகள்" என்னும் புத்தகத்தை சிலாகித்துப் பேசினார். அது நான் முதலில் குறிப்பிட்ட புத்தகத்தின் தொடர்ச்சி என நான் அவருக்கு எடுத்துக் கூற, அவ்வளவுதான் ஆக்ராவிலிருந்து காரில் டில்லி வரும்வரை நாங்கள் இருவர் மட்டுமே பேசி வந்தோம். நேரம் போனதே தெரியவில்லை.

முதல் புத்தகம் சரித்திரத்தைக் கூற இரண்டாம் புத்தகமோ தற்போது இஸ்ரேலியர்கள் அரேபியருடன் சேர்ந்து சமாதானத்துக்காக முயற்சிக்க வேண்டும் என்பதை கூறுகிறது.

அவை கதைப் புத்தகங்கள்தான், ஆனால் உண்மையின் அடிப்படை அவற்றுக்கு உண்டு.

இப்போது கூட குடிமுழுகவில்லை. ஈழத்தமிழர்கள் கிபி 70இல் இஸ்ரேலியர்கள் இருந்த நிலையில் உள்ளனர். அவர்களைப் போல இவர்களும் முயன்றால் "அப்ரஹாமின் குழந்தைகள்" புத்தகம் போல பகைமறந்து சேர்ந்துவாழ எண்ணம் உருவாகலாம். அதன்பிறகு வேண்டுமானால் ஒப்பீடு குறித்து யோசிக்கலாம். இல்லாவிட்டால் ஒப்பிட்ட வாயைக் கழுவு என்றுதான் நான் கூறுவேன்.

# சங்ககால சங்கதிகள்



() நேரம் அறிய நாழிகை வடில் (கடிகாரம்) பற்றி சொல்வது

**முல்லைப் பாட்டு**

() உண்ணும் முன் காக்கைக்கு சோறிடுவது பற்றி விளக்குவது

**பொருநராற்றுப்படை**

() பொன்னை உரைத்து மாற்றுப் பார்த்தல் பற்றி விளக்குவது

**பெரும்பாணாற்றுப்படை**

() பாகன் யானையோடு பழகும் முறையை விளக்குவது

**முல்லைப் பாட்டு**

() காவிரிபூம்பட்டினம் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி நடந்ததை சொல்வது

**பட்டினப்பாலை**

() கார்த்திகை தீபம் ஏற்றுவதை விளக்குவது

**கார்நாற்பது**

# ஒய்வு இல்லை

**ஜப்பானிய மொழியில் 'உழைப்பு' என்ற அர்த்தத்தைத் தொனிக்கக் கூடிய சொற்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் 'ஓய்வு' என்ற வார்த்தையைக் குறிக்கும் சொல் அம்மொழியில் இன்று வரை இல்லை.**




# சிதம்பராக் கல்லூரி (வல்வெட்டித்துறை)

எமது கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் பிரபல்யம் அடைந்து தாய் நாட்டிற்கும், வல்வை நகருக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். எமது பாடசாலை வளங்கள் பெரும்பாலானவை வல்வையர்களால் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெரியார் பேடன் பவல் பிரபு அவர்களால் 1907ஆம் வருடம் 120 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணீயம், இலங்கையில் 1912ஆம் வருடமும் யாழ்.மாவட்டத்தில் 1916ஆம் வருடம் 5 துருப்புக்களுடன் (Troops) 120 பேருடனும் ஆரம்பிக்கப்பட்டது. எமது கல்லூரியில் 1942ஆம் வருடம் 13 இளஞ்சிறார்களுடன் தொடக்கி வைக்கப்பட்டது.

யாழ். பழைய பூங்காவில் 1957ஆம் வருடம் நடைபெற்ற வருடாந்தப் போட்டியில் முதன்முதலாகக் கலந்து கொண்டு பெரும்பாலான பார்வையாளர்கள், இதர சாரணர்கள், சாரணாசிரியர் ஆகியோரது பாராட்டைப்பெற்றது.



**நூற்றாண்டு நாள் அதிபர்**
**திரு. சி. தங்கராசா**
**(1995 - 1998)**

1960,1961,1962,1965 ஆம் வருடங்களில் யாழ். பழைய பூங்காவில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி சிதம்பரா சாரணர்கள் யாழ்.மாவட்டத்தில் சிறந்த சாரணர் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'ரோட்டரிக் கேடயத்தைப்' பெற்றுக்கொண்டது, 1952 ஆம் வருடம் சாரணர்களுக்கான போட்டிகள் யாழ். மாவட்டத்தில் தொடங்கப்பெற்று 1965ஆம் வருடம் வரை நடைபெற்ற 14 போட்டிகளில் நான்கு போட்டிகளில் சிறந்த சாரணர் குழுவாக சிதம்பரா சாரணர்குழு தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1962ஆம் வருடம் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றும் தரத்தை எமது சாரணர் குழு பெற்றது.1968ஆம் வருடம் கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டியில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்று 'நவீனவிக்னானி' கேடயத்தையும் எமது கல்லூரிக் குழுவினர் சுவீகரித்துக் கொண்டார்கள்.



**ஸ்தாபகர்**
**கு. சிதம்பரப்பிள்ளை**



கால்கோள் விழாவின் போது...


கரப்பந்தாட்டப் போட்டியில் சிலகாலம் எமது குழுவினர் பிரகாசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்த போதும், முன்பு இருந்த நிலையை மீண்டும் நிலைநாட்டும் முகமாக மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தும் கூட இருப்பவர்களைக் கொண்டு பயிற்றுவித்து கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியதுடன் மட்டுமல்லாமல் வலய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டதையும் குறிப்பிடவேண்டும்.

எமது கல்லூரி மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலும் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு சாதனை புரிந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். லண்டனில் இயங்கி வரும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கிடையே 1995ஆம் வருடம் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் சிதம்பராவின் பழைய மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்கள்.



**தேசிய மட்டத்தில் விருது பெற்ற மாணவன்**

விளையாட்டுத் துறையில் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு நில்லாமல், தாம் கல்லூரியை விட்டு விலகிய பின்னரும் மாணவர்க ளுக்குப் பயிற்சியை வழங்கியும், வெள்ளிக் கேடயங்களையும், வெள்ளிக் கோப்பைகளையும் வழங்கியுமுள்ளார்கள். பயிற்சியை வழங்கியவர்களில் சிறந்த விளையாட்டு வீரராக இருந்து அகால மரணமான திரு.அ.வி.அருணாசலம் அவர்களும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



2012ஆம் ஆண்டு மெய்வல்லுனர் போட்டியின்போது.



## அதிபர்
## திரு. கி.இராஜதுரை

2011இல் எமது பாடசாலையில் அதிபராக கடமையேற்றார். கடமையேற்ற காலத்தில் இருந்து பாடசாலைக்கென தன்னை அர்ப்பணித்து வருகிறார் . கல்வி, கலை, கலாசார விளையாட்டுத்துறை போன்ற அனைத்திலும் அக்கறை காட்டி வருகிறார். மாணவர்கள் கோட்டம், வலயம், மாகாணம் என்ற போக்கில் தேசிய மட்டம் வரை சென்று பரிசில்களை தட்டிச் சென்றுள்ளனர். தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளார். மாணவர்களின் கல்வி மட்டும் அல்ல, சமூக பழக்க வழங்கங்களிலும் அக்கறை காட்டி வருகின் றார். வாழ்க அவர் பணி.



பாடசாலை ஆசிரியர் குழாம்

# அபிவிருத்தி நோக்கிய யாழிற்காக தேசிய தொழில் வங்கி உருவாக்கம்




அபிவிருத்தியை நோக்கி நகரும் யாழ்ப்பாணம் என்ற கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று தேசிய தொழில் வங்கி ஒன்று உருவாக்கம் பெறுகின்றது. யாழ்ப்பாணம் அபிவிருத்தியை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதன் காரணத்தினாலேயே இவ்வங்கியின் தேவை இன்று இங்கு அவசியமாகியுள்ளது என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நகர்ப்பகுதியில் தேசிய தொழில் வங்கி யினைத்திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்; அபிவிருத்தி என்று எதுவும் நடைபெறவில்லை மக்களின் வாழ்வில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்ற கருத்துக்களுக்கு இன்றைய தொழில் வங்கியின் உருவாக்கம் சரியான பதிலை வழங்கியிருக்கின்றது. அரச வேலைவாய்ப்பை பெற வேண்டும் என்ற கனவு இன்றைய அனைத்து இளைஞர் யுவதிகளிடம் காணப்பட்ட போதும் யுத்தமுடிவுக்குப்பின்னர் அரச திணைக்களங்களின் வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விட்டன. அண்மையிலே இரண்டாயிரம் பட்டதாரிப்பயிலுநர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தர நியமனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் அனைவரையும் உள்வாங்கக்கூடிய வலு எமக்குண்டு என்பதை நான் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதேவேளை பல்கலைக் கழகங்களிலிருந்து வருடாந்தம் நாலாயிரம் வரையான பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். இவர்களில் 80 சதவீதமானவர்கள் கலைப்பட்டதாரிகள். அவர்களின் கனவுகள் ஆசிரியராக வேண்டுமென்பதே. ஆனால் இன்று வடமாகாணத்தில் மூவாயிரம் வரையான ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.19 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஆளணி இருக்க வேண்டுமென்பது அரச நியதி.ஆனால் இங்கு 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர் வளம் உள்ளது. ஆகவே எதிர்காலத்தில் சில விசேட பாடங்களுக்கான ஆசிரியர்களைத்தவிர, பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவது நடைமுறையில் சாத்தியமற்றது. ஆகவே பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் பட்டதாரிகளும் மேலதிக தகைமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவகையில் பல்கலைக் கழகங்கள் செயற்பட வேண்டும். அதனூடாகவே அவர்கள் எந்தத் துறைகளிலும் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை உருவாகும்.

அத்தோடு இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்வங்கி மேலும தமது சேவையை விஸ்தரிக்க வேண்டும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.தொழில் வங்கியின் முகாமையாளர் சறோஜினி நாகராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தொழில்சார் ஆலோசகரும் விவசாய பீடாதிபதியுமான பேராசிரியர் மிகுந்தன், மத்தியவங்கியின் வடமாகாண முகாமையாளர் சிவதீபன், யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட இணைப்பாளர் சிவராஜா, யாழ். கைத்தொழில் வணிக மன்றத்தலைவர் பூரணச்சந்திரன், நல்லூர் பிரதேச செயலர் சுபாஜினி, தொழில் திணைக்கள பணிப்பாளர் ராகவன் மற்றும் நிறுவன பணிப்பாளர் நகுலன் ஆகியோரும் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டனர். (ப்ா)

## கடல் நீரேரியில் மீன்பிடி ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையைத் தொடர்ந்து வீச்சுவலையில் மீன் பிடிப்போர் தங்கள் தொழிலை ஆரம்பித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் பெய்த கன மழையைத் தொடர்ந்து கைதடி-நாவற்குழிப்பாலத்திற்கு அருகாமையில் உள்ள கடல் நீரோரியில் அங்காங்கே நீர் நிறைந்து காணப்படுகிறது. இதனால் வீச்சு வலையில் மீன் பிடிப்போர் அவ்விடத்தில் தமது தொழிலை ஆரம்பித்திருப்பதோடு,பிடிக்கப் படும் மீன்களை வீதி அருகோரம் வைத்து விற்பனை செய்வதையும், அவ்வீதியால் செல்லும் பயணிகள் மீன்களை வாங்கிச் செல்வதையும் காணக் கூடியதாக உள்ளது.

இதேவேளை இத் தொழிலில் ஈடுபடும் ஒருவர் கூறியதாவது; இரண்டு நாள் பெய்த மழையினால் தேங்கி நிற்கும் தண்ணீரில் மீன்கள் வந்திருக்கின்றன. தொடர்ந்தும் மழை பெய்யுமாக இருந்தால் மீன்கள் நிறையவே வரும். நமது தொழிலும் சுமாராகப் போகும் எனத் தெரிவித்தார். (138)

## யாழ். செம்மணி வயல்களில் விதைப்புக்கான வேலை ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் தங்கள் விதைப்புக்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டுவருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

யாழ். செம்மணி வீதிக்கு வடதிசையில் அமைந்துள்ள வயல்களில் விவசாயிகள் வரம்பு அணைப்பதிலும் நிலத்தை உழுது பண்படுத்துவதுமான தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் கடும் வறட்சி நிலவிய நிலையில், அண்மையில் மழை பெய்த போதும், இம்மழையானது காலம் பிந்திப் பெய்துள்ளதால் விதைப்பு வேலைகளும் பின்தள்ளப்பட்டுப் போய் விட்டன என்று உழவு தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார். (138)




கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எட்டு மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (137)

## பதிவிரக்கப் பெட்டகம்

மாக்கடல் முகந்து
மாதிரத்து இருளி
மலர்தலை உலகம்
புதைய வலனேர்பு
பழங்கண் கொண்ட
கொழும்பல் கொண்மூப்
போழ்ந்த போலப்
பலவுடன் மின்னித்
தாழ்ந்த போல
நனியணி வந்து
சோர்ந்த போலச்
சொரிவன பயிற்றி
இடியும் முழக்கும்
இன்றிப் பாணர்
வடியுறு நல்யாழ்
நரம்பிசைத் தன்ன
இன்குரல் அழிதுளி
தலைஇ நன்பல
பெயல் பெய்து கழிந்த
பூநாறு வைகறை.
– **அகநாநூறு**

விரிகடலில் வெண்குடைக்கீழ்
வீற்றிருக்கும் மழை அரசி
மாயமாய் காணாமல்
மறைந்துபோனாள்,
கிடைக்கவில்லை
மண்ணிலுள்ள மாந்தரெல்லாம்
மனம் புழுங்கிப் புலம்புகிறார்
கடலிலுள்ள பெண்களெல்லாம்
மாரடித்துத் தேம்புகிறார்
ராணியை நீ கண்டதுண்டோ?
மறைவிடத்தை அறிந்ததுண்டோ?
– **பிச்சமூர்த்தி**

வானம் கட்டுப்பாடற்று
பெற்றுத் திரியவிட்ட
மேகங்கள்,
பொல்லா வாண்டுகள்.
நினைத்த இடத்தில்,
கவலையற்று,
நின்று தலையில் பெய்துவிட்டு,
மூலைக்கொன்றாய் மறையுதுகள்
வெள்ளை வால்கள்!
– **எஸ்.வைத்தீஸ்வரன்**

ஆறு
மழையின் அடியில் உருவாகிறது
மரங்களின் வழியே செல்கிறது
ஒவ்வொரு துளியும் அதற்கு வழி செய்கிறது
ஒளிமிக்க மின்னல்
நீரின் போக்கைச் சுட்டிக்காட்டுகிறது
அதன் எல்லையில்லாப் பரப்பு
அந்தரங்கமானது
நகரை நோக்கி
கட்டுமீறி நகர்கிறது
இடையிலாது
போய்க்கொண்டே
அதுவே புனிதம்.
– **ஹோமிரோ அரிட்ஜிஸ்**

கார்காலம் வரவும் வானம்
கவிழ்த்தது மழை நன்னீர்; இப்
பாரெலாம் செழிக்க, நீ என்
ஊரெலாம் மலர்ந்தாய் கண்டேன்
காட்டு மல்லிகையே உன்னை
யார் தள்ளினாலும் என்ன
யானுளேன் பாடுதற்கு!
– **மஹாகவி**

வெண்மேகம் தகடுகளாய்ப் பிளந்து
இடையிடையே வானம் நீலங்கள் காட்டும்
மின்கம்பியில் பள்ளிப் பிள்ளைகளாய்
நீண்ட வால்களுடன் வரிசையில் சிறுபறவைகள்
சோம்பலுடன் எருமைகள் நடக்க
சில்லென காற்று வீசும் முகத்தில் அறையும்
இன்னும் வேறு என்ன வேண்டும்
நற்கவிதை ஒசையாய் பெருமழைத் தூறல்.
– **ஆர்.ராஜகோபாலன்**

இன்று காலை பெய்த மழ்ையில்
நைட்டிங்கேல் பாட்டுக் கூட
நனைந்துவிட்டது
– **ஜப்பானிய கவிதை**

நீ மழையைப்
பார்த்திருக்கிறாயா
எப்போதாவது
சுவாசிக்கப் பழகுகிற
குஞ்சு மீன்கள்
முதிர்ந்த மல்ழ நாளில்
தாமரைப் பூக்களுக்குக் கீழே
விழிப்பதை மழையில்
நனைந்தபடியே
பார்த்திருக்கிறாயா
மாட்டுக் கொட்டிலினுள்
எருமைக் கண்ணில்
மொய்ப்பது மறந்து
காதடியில் அமர்ந்து
மழைநேரம் போக்கும்
தடித்த ஈக்களை
எப்போது
துணையாக்கப் போகிறாய்
மிகத் தைரியமாய்
கோடைப் பூமியில் விழுந்து
சாகிற
முதல் மழைத் துளிகளை
நீ எப்போதாவது
பார்த்திருக்கிறாயா?
– **கலாப்ரியா**

அலைகடல் ஆர வாரம்
அலையெங்கள் காதல் கீதம்
மலைமுக டடையும் மேகம்
மணவிழாப் பந்தற் கோலம்
நிலைதொறும் நீரின் தேக்கம்
நெஞ்சத்தில் வார்த்த தீர்த்தம்
இலைமலர் கனிக ளெல்லாம்
எமக்கவன் மணிமுத் தாரம்.
– **கண்ணதாசன்**

மழை வரும்போது
வந்து சேரும்
இந்தத் துக்கம்
ஒரு துக்கத்தைப் போலவே
இல்லை அது
துக்கத்தில்
தழுவிக் கிடக்கும் பெண்
ஒரு பெண் போலவே இல்லை
நீ.
– **மனுஷ்யபுத்திரன்**

எல்லையிலா வானிடையே வெளவால் போலே
இருண்ட மழை மேகங்கள் சூழலாச்சு
ஜில்லெனவே கடல்வாடை சிலிர்க்கலாச்சு
சீறி அலை பேய்ச்சிரிப்பு சிரிக்கலாச்சு
கன்மலையைப் பிளந்தூான்றும் அரசின் வேர்போல்
கண்கூச இடிமின்னல் தோன்றலாச்சு. – **கம்பதாசன்**

# அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அங்கங்கள் பொருத்தல்



(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில் இயங்கி வரும் செயற்கை அவயங்கள் பெருத்தும் நிலையமான மெத்தா நிறுவனம் கடந்த வாரம் கண்டியில் உள்ள பொல்கங்க எனும் இடத்தில் நீரிழிவு நோயினால், வீதி விபத்தினால், பிறப்பினால் உடல் அங்கங்கள் துண்டிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடமாடும் சேவையை வைத்திய கலாநிதி பி. பனாகமுவ தலைமையின் கீழ் 08 பேர் கெண்ட குழுவினரால் நடாத்தப்பட்டதாக மன்னார் பொது வைத்தியசாலையின் மெத்தா நிறுவன தொடர்பு அதிகாரி சின்கிலேயர் பீற்றர் தெரிவித்தார்.

இதில் அதிகமாக 22 ஆண்களும் 02 பெண்களும், 03 சிறுவர்களும் அடங்குவர். இவர்களுக்கு பொய்க்கால் பொருத்துவதற்காகவும் சக்கர நாறகாலி வழங்குவதற்காகவும் அளவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இரு கிழமையின் பின் இவர்களுக்கு அவயங்கள் இலவசமாகப் பொருத்தப்பட உள்ளன.

மேலும் இச் சேவைகளை இலவசமாகப் பெற விரும்பும் வன்னிப் பகுதி பாடசலை அதிபர்கள் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம், சமய நிறுவனங்கள் உங்கள் பகுதிகளில் ஊனமுற்றவர்கள் இருப்பின் அவர்களின் தேவையை அறிந்து விபரங்களை எமக்கு கடிதம் மூலமாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைத்தால் 10 நபர்களுக்கு மேல் இருப்பின் மெத்தா நிறுவனம் அப்பகுதியில் நேரடியாக வந்து நடமாடும் சேவையை நடாத்தி உதவி வழங்கவும் உள்ளது.

யுத்தம் முடிவுற்று 3 வருடங்களின் பின்பும் கன்னி வெடிகளின் பாதிப்பினால் பாதசாரிகள், சிறுவர்கள், பெண்கள், என வடமாகாணத்தில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே குறித்த உத்வியைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் திரு.சின்கிலேயர் பீற்றர், மெத்தா நிறுவன தொடர்பு அதிகாரி, வைத்தியசாலை, மன்னார். என்ற முகவரியுடனும் அல்லது 023-3230473 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்மாதிரி நிறுவனம்



(யாழ்ப்பாணம்)

பிற நாட்டு பயணத் திற்கென தமக்கு கட்டணத்தைச் செலுத்தி திடீர் சூழ்நிலையால் பயணம் செய்ய முடியாத எஸ்.சுபராஜ் குடும்பத்தினருக்கு அவர்கள் வழங்கிய முழுப்பணத்தையும் திசைகாட்டி விசா ஆலோசனை நிறுவனம் மீள வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ரில்கோ விடுதியில் நடைபெற்றது. நிறுவனத்தின் பதில் இயக்குநரும், பிரபர தொழிலதிபரும், பட்டய கணக்காளருமாகிய எஸ்.செல்வராஜா மேற்படி பணத்திற்கான காசோலை மற்றும் பயணத்திற்குத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பவற்றை திருமதி சுபராஜிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் இணை நிர்வாக இயக்குநர், ஏ.பிரவீணா, பொது முகாமையாளர் உலகசேகரம் மற்றும் சமூகப்பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இந்த முன்மாதிரியான செயற்பாட்டைப் பாராட்டிய அவர்கள் இது போல் எல்லோரும் செயற்பட வேண்டும் எனவும் கூறினர். (54)

# சண்டிலிப்பாயில் சிறுவர்தினம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தினவிழா கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலர் எஸ். முரளிதன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்கஅதிபர் ரூபினி வரதலிங்கம் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதார பரிசோதகர், சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி, மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறுவர் கழக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறுவர் இல்ல மாணவர்களின் கலைநிகழ்வுகள், என்பனவும் சமுர்த்தி மாணவர்களுக்கான சேமிப்பு புத்தகம் வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரி பயிலுனர்கள் வழங்கிய பாலியல் சம்பந்தமான விழிப்புணர்வு நாடகம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நாடகம் ஒவ்வொரு பாடசாலை மூலமும் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆற்றுகை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

# ஒல்லாந்தர் கோட்டை மன்னாரில் புனரமைப்பு



(கொழும்பு)

ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட மன்னார் கோட்டையைப் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மன்னார் நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை கடந்த காலங்களில் அதியுயர் பாதுகாப்பு வலையமாகக் காணப்பட்டது.

யுத்தம் முடிவடைந்த நிலையில் தற்போது குறித்த கோட்டையை பார்வையிடுவதற்காக தென்பகுதி மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் குறித்த கோட்டையினை புனரமைப்பு செய்யும் முகமாக முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தொல்பொருள் அமைச்சு, இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு, இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு, இராணுவத்தின் 23 ஆவது கெமுனு படைப்பிரிவு, இராணுவத்தின் 19 ஆவது விஜயபாகு படைப்பிரிவு ஆகியவை இணைந்து குறித்த பணியினை ஆரம்பித்துள்ளன.

ஆரம்பநாள் நிகழ்வில் இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயேஸ், இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு அதிகாரி ராமநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கைதடி – நாவற்குழியில்

# அரச களஞ்சியம் முன் துர்நாற்றம் அதிகாரிகளோ இதுவரை மௌனம்

(புதுக்குடியிருப்பு)

கைதடி - நாவற்குழி ஏ-9 வீதியில் உள்ள ஒரு விரிந்த குழியினுள் தேங்கி நிற்கும் நீரானது மிகுந்த துர்நாற்றம் வீசுவதால் அவ்வீதியால் செல்லும் பொது மக்கள் உட்பட வாகனங்களில் பயணம் செய்யும் பயணிகளும் மூக்கைப்பொத்தி அருக்குளித்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

துர்நாற்றம் பரப்பும் இக்குழியானது நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்துக்கு முன்பாக அமைந்திருப்பதுடன், நீரினுள் கழிவுகள் பலதும் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்விடயம் குறித்து ஏற்கனவே ஊடகங்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும், இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அன்றி அதற்குரிய பிரதேச சபையோ கவனத்தில் எடுக்காது செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதேவேளை அந்துர்நாற்றம் பரப்பும் இக்குழி குறித்து அவ் வீதியால் பயணம் செய்த ஒரு குடும்பஸ்தர் தெரிவித்ததாவது, நான் தினமும் கைதடி - நவீல்ட் ஒழுங்கையில் இருந்து யாழ்ப் பாணத்துக்குச் சென்று வருகின்றேன். இந்த இடத்திற்கு வரும் போது துர்நாற்றம் தாங்கமுடியவில்லை. முன்பு கடும் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் குழியில் உள்ள நீர்வற்றிச் சென்றதால் இவ்வாறு துர்நாற்றம் பரவுகிறது. இக்குழியை கிரவல் போட்டு மூடிவிடுவது நல்லது. தென்மராட்சி பிரதேசசபை கூட இதைக் கவனிப்பதாக இல்லை.

அத்தோடு, டெங்கு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுவோர், பிரசாரம் செய்வோர், இவ்விடத்துக்கு நேரடியாக விஜயம் செய்ய வேண்டும் இந்தக் குழியில் வற்றிச்செல்லும் நீரில் இருந்து டெங்கு நுளம்பு பரவும் அபாயம் இருக்கிறது. எனவே இனியாவது சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ் விடயத்தில் கவனம் செலுதத வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (138)

# 6 கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள 6 கிராம அலுவலா பிரிவுகளைச் சேர்ந்த தங்கள் உறவினர் நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் மக்கள், இன்று வெள்ளிக்கிழமை சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் மேற்படி வெளியிடங்களில் வசிக்கும் மீள்குடியமர விரும்பும் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இன்றையதினம் மீள்குடியமர விரும்பும் மக்களை கொக்கிளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வருகைதருமாறும், வரும்போது முன்னர் வசித்த கிராம அலுவலரின் பதிவு நீக்கற கடிதத்தில் பிரதேச செயலரின் கையொப்பமிடப் பட்ட கடிதத்துடன் வருகை தரவேண்டும்.


அத்துடன் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட மக்கள் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத் தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

வடக்கே 60 m தூரத்திலும் அமைந்துள்ளன. இதற்கேற்ப, காரியாலயக் கட்டடம் அமைந்திருப்பது வாசிகசாலையிலிருந்து
1) 50m வடக்கே 2) 170 m மேற்கே 3) 180m தெற்கே 4) 110 m வடக்கே

19) கொழும்பிலிருந்து 180 km தூரத்தில் இருக்கும் மாத்தறைக்குப் புறப்பட்ட பேருந்து 120 km தூரத்தினை 3 மணித்தியாலயத்தில் கடந்தது. அப் பேருந்து அதே கதியில் சென்றால் மாத்தறையை அடைய மேலும் எவ்வளவு நேரம் எடுக்கும்?
1) 1 மணித்தியாலம் 2) 1 மணி 30 நிமிடம் 3) 2 மணித்தியாலயம் 4) 3 மணித்தியாலம்

**பின்வரும் தகவலைக் கருத்திற் கொண்டு 20 ஆம் வினாவுக்கு விடை தருக.**

அநுராதபுரம், வவுனியா, பதுளை, மாத்தறை, அம்பாறை ஆகிய நகரங்களில் இன்று நள்ளிரவு 12.05 மணிக்கு புறப்பட்ட பேருந்து கொழும்பை அடைந்த நேரம் பின்வரும் மணிக்கூடுகளினால் காட்டப்பட்டுள்ளது.



வவுனியா அநுராதபும் பதுளை மாத்தறை அம்பாறை


20) மேற்கூறிய தகவலின்படி பேருந்துகள் கொழும்பை அடைந்த ஒழுங்குமுறையை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1) அனுராதபுரம் → பதுளை → அம்பாறை → மாத்தறை → வவுனியா
2) வவுனியா → மாத்தறை → அம்பாறை → பதுளை → அநுராதபுரம்
3) பதுளை → அநுராதபுரம் → வவுனியா → மாத்தறை → அம்பாறை
4) மாத்தறை → வவுனியா → அம்பாறை → அநுராதபுரம் → பதுளை

**2013 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதனைக் கருத்திற்கொண்டு 21 ஆம் வினாவுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**


21) 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உள்ள வியாழன், வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை முறையே
1) 5, 5 ஆகும் 2) 5, 4 ஆகும் 3) 4, 5 ஆகும் 4) 4, 4 ஆகும்
2013 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி என்ன கிழமை
1) புதன் 2) திங்கள் 3) வியாழன் 4) வெள்ளி

**தரப்பட்டுள்ள உருவானது சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றின்போது தெரிவுசெய்யப்பட்ட ஓட்டப்பாதையாகும்.**

22) இப்பாதையின் ஓட்ட வீரர்கள் இடது பக்கம் திரும்பிய தடவைகள் எத்தனை?
1) 7 2) 8 3) 9 4) 10




23) சதுரத்தாள் ஒன்று நான்காக மடிக்கப்பட்டு வெட்டப்பட்ட விதத்தினை உரு காட்டுகிறது. வெட்டப்பட்ட உரு விரிக்கப்படும்போது தோன்றும் விதத்தினைத் தெரிவு செய்து கோடிடுக.




**கீழுள்ள எழுத்துக்களையும் அதற்காக, இலக்கங்களையும் அவதானித்து பின்வரும் வினாவுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

| A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

24) மூன்றால் வகுபடும் நான்கிலக்க எண்ணைத் தெரிவு செய்து கோடிடுக.
1) EDAC 2) CDEB 3) GHAB 4) DEGB

25) சதுர எண் ஒன்றையும் முக்கோண எண் ஒன்றையும் முறையே கொண்ட தொகுதி எது?
1) BF, CF 2) BG, CB 3) EJ, FB 4) CB, EJ

(தொடரும்....)

**எதிர்வரும் திட்கட்கிழமை இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் வெளிவரவுள்ளது**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 01



S.T.திலக்


**பின்வரும் பாடலை வாசித்து 1ம், 2ம் வினாக்களுக்கு விடை தருக**

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதனால்
உந்தன் கைக்கு மிகுந்த பலம்
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்
தேடித் தேடிப் படிப்பவரால்
தெளிந்த அறிவை அடைந்திடலாம்
ஓடி ஓடி உழைப்பவரால்
உயர்ந்த இலக்கை எய்திடலாம்.

1) ஒற்றுமைக்கு உவமானமாகக் காட்டப்படுவது,
1) செல்வம் 2) கைவிரல்கள் 3) காகம்

2) உயர்ச்சிக்கு சிறந்த வழி
1) உழைப்பும் - சிக்கனமும் 2) கைவிரலும் - உழைப்பும் 3) ஒற்றுமையும் - உழைப்பும்

**ஒரு குறித்த நகரில் மருத்துவமனை, வாசிகசாலை, பாடசாலை, மைதானம் என்பன அமைந்துள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதை அவதானித்து 3 ஆம் வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**




இங்கு A= மருத்துவமனை B= பாடசாலை
C= வாசிகசாலை D= மைதானம்

3) பாடசாலையிலிருந்து ஏனைய மூன்று இடங்களுக்கும் செல்வதற்குக் குறைந்த தூரமாக அமையும் சரியான வழியைத் தெரிவு செய்து கோடிடுக.
1) A→ C→D 3) C→D→A 3) C→A→D 4) A→D→C

**கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன**

4) A - அசுத்தமான உணவை உண்பதால் கிருமிகள் உடம்பில் தொற்றுகின்றன.
B - ஈக்களின் கால்களில் இருக்கும் அசுத்தங்கள் உணவுடன் சேருகின்றன.
C - சிலர் வீட்டுக்கருகாமையிலே குப்பை கூளங்களைக் குவித்து வைக்கின்றனர்.
D - ஈக்கள் உணவில் அமருகின்றன.
E - உடலினுள் கிருமிகள் செல்வதனால் வயிற்றுவலி ஏற்படுகின்றது.
F - குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருக்கமடைகின்றன.
மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்கு முறையினைக் காட்டும் விடை யாது?
1) CEADFB 2) CFDBAE 3) ABCDEF 4) CFDEAB

**அருகே தரப்பட்டுள்ள படம் சித்தரிக்கும் பிழையான தகவலைத் தெரிவு செய்து கோடிடுக.**

5) 
1) தாய் பிள்ளையை ஆறுதல்படுத்துகிறாள்
2) பிள்ளை அழுதுகொண்டிருக்கிறது
3) பிள்ளையின் விளையாட்டுப் பொருள் உடைந்து விட்டது.
4) தாயைப் பிள்ளை ஆறுதல்படுத்துகிறது.

**பின்வரும் வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

6) நீங்கள் வாழும் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை கூடுதலாக உள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியது யாது?
 1) தூங்கும்போது நுளம்பு வலையைப் பாவித்தல்
 2) தூங்கும்போது நுளம்புச் சுருள் ஒன்றை எரிய வைத்தல்.
 3) நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாமற் செய்தல்.

7) ஒரு மாணவன் சந்தோசப்படத்தக்க ஒரு சந்தர்ப்பம் எதுவாக இருக்கும்?
 1) பரீட்சையில் எதிர்பார்த்த 100 புள்ளிகளைப் பெறல்
 2) ஓட்டப் போட்டியில் நான்காம் இடத்தைப் பெறல்.
 3) உயரம் பாய்தலின்போது கை ஒன்று உடைதல்.
 4) பேச்சுப் போட்டி ஒன்றின்போது நான்காம் இடத்தைப் பெறல்.


8) ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்தில் இருந்து கணக்கிடும்போது அவள் 6 ஆவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?
 1) 18  2) 19  3) 21  4) 22

**கீழே தரப்படும் தகவலை வாசித்து நன்கு விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

9) ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்
 1) மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழக்கம் ஓசைகேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன.
 2) ஓட்டப்போட்டியின்போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது.
 3) மேற்கூறிய யாவும் சரியானவை.


**உருக்களுக்கிடையேயுள்ள தொடர்பை அவதானித்து ஏனைய உருவில் வரவேண்டிய இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

10)




 1) 15  2) 20  3) 30  4) 40

11) உணவு, சிற்றுண்டி, லட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு பின்வரும் உரு காட்டப்பட்டுள்ளது. இதில் B யினால் காட்டப்படுவது.
 1) உணவு  2) சிற்றுண்டி  3) லட்டு




**கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

12) கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக்கூடாது
 1) இக்கரைமாட்டிற்கு அக்கரைப் பச்சை  2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
 3) கழுதை அறியுமா கற்பூர வாசனை

13) கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது
 1) பேராசை பெருந்தரித்திரம்  2) கிட்டாதாயின் வெட்டென மற
 3) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது




**பின்வருவனவற்றை உரிய முறையில் தொடர்புபடுத்தினால் வரும் விடையின் கீழ் கோடிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 14) 1) நெத்தலி, திருக்கை, சுறா, கணவாய் | 6 | 1 | தானியங்கள் |
| 2) கத்தரி, வெண்டி, பாகல், புடோல் | | 2 | பெருந்தோட்டப் பயிர்கள் |
| 3) மரவள்ளி, வத்தாளை, இராசவள்ளி | | 3 | மரக்கறி வகைகள் |
| 4) குரக்கன், சாமி, தினை, வரகு | | 4 | கிழங்கு வகைப் பயிர்கள் |
| 5) எள், தேய்காய், சூரியகாந்தி, கறுவா | | 5 | எண்ணெய் பெறப்படுவன |
| 6) தேயிலை, இறப்பர், தென்னை | | 6 | கடல் உணவுகள் |

 1) 34152  2) 31542  3) 51432  4) 12345


**பின்வரும் வினாவில் கூட்டுக்குள் குறியீடுகளும், அதன் பெறுமதிகளும் தரப்பட்டுள்ளன. அதனை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமதியைத் தெரிவு செய்து கோடிடுக.**

15)




 1) 95  2) 90  3) 100  4) 125

16) சில தகவல்களும், தகவல்களுக்கு ஏற்ப சிட்டை ஒன்றின் பெறுமதியும் அருகே தரப்பட்டுள்ளன. தகவலை விளங்கி 16 ஆம் வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.



| | |
|---|---|
| 2 அன்னாசி | 180.00 |
| 2 அப்பிள் | .................. |
| 6 பப்பாசிப்பழம் | .................. |
| 5 தோடம்பழம் | .................. |
| ரூபா. | 380.00 |


 1) அன்னாசி ஒன்றின் விலையைத் தெரிந்து கோடிடுக.
 1) ரூபா 80.00  2) ரூபா 100.00  3) ரூபா 90.00  4) ரூபா 60.00


 2) பின்வரும் சிட்டையின் பெறுமதியினைக் காண்க.

அன்னாசி + 2 அப்பிள் + 3 பப்பாசிப்பழம் + 5 தோடம்பழம்

 1) 1) ரூபா 200.00  2) ரூபா 245.00  3) ரூபா 250.00  4) ரூபா 320.00

17) உருவை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக.





 1)  2)  3)

18) பாடசாலை ஒன்றின் வாசிகசாலையானது பிரதான மண்டபத்திலிருந்து 50 m தெற்கேயும், வகுப்பறைக் கட்டடம் வாசிகசாலைக்கு மேற்கே 60 m தூரத்திலும், காரியாலயக் கட்டடம் பிரதான மண்டபத்திற்கு

# ஆசிய கடல் பகுதியில் ஆயுதக் கும்பல்கள் அச்சுறுத்தல்கள்

(புதுடில்லி)


கொள்ளை சம்பவங்களும், ஆயுதம் ஏந்திய கும்பல்களின் தாக்குதல்களும், ஆசிய கடல் பகுதியின் அச்சுறுத்தலாக விளங்குகின்றன் இவை, ஸ்திரத்தன்மையைப் பாதிக்கின்றன என இராணுவ அமைச்சர் அந்தோணி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் ஆசிய கடலோரக் காவல் படை மாநாடு நடந்தது. சீனா, ஜப்பான், வங்கதேசம், இலங்கை, வியட்னாம், கம்போடியா என 17 நாடுகளின், கடலோரக் காவல் படைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டில், இராணுவ அமைச்சர் அந்தோணி தெரிவித்துள்ளதாவது:


ஆழ்கடலில், சாதாரண திருட்டு முதல், தீவிரவாத நடவடிக்கை வரை பலவும் நடக்கின்றன. பரஸ்பர ஒத்துழைப்பு, தகவல்கள் பரிமாற்றம் போன்றவையே, கடல்களின் பாதுகாப்பை உறுதி செய்யும். ஆயுதம் ஏந்திய கொள்ளைக் கும்பல்களின் தாக்குதல், கப்பல்களைக் கடத்திச் செல்லுதல், போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதம் கடத்தல் போன்ற அச்சுறுத்தல்கள் ஆழ்கடல் பகுதியின் சவால்களாக உள்ளன.

இவை, இந்தப் பகுதியின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கின்றன. கடல் பயணம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்ற எங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில், பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளோம். கடற் கொள்ளையர்கள் தாக்குதல், தீவிரவாத நடவடிக்கைகள், ஆயுதக்கடத்தல் மற்றும் எண்ணெய்க் கசிவு போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம்.

இதற்காக, ஆசிய கடல் பகுதியில் உள்ள நாடுகளுடன், குறிப்பிட்ட கால இடைவெளியில், போர்ப் பயிற்சிகளும் மேற்கொள்கிறோம். பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது பரஸ்பர பயிற்சி, ஒத்துழைப்பு போன்றவற்றின் மூலம், எதிர்காலத்தில், கடல் பயணம் பாதுகாப்பானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆசிய கடல் பகுதியில் உள்ள நாடுகள் அனைத்தும், ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம், இந்தப் பகுதியை பாதுகாப்பானதாக மாற்றலாம் என்றார்.




# கூடங்குளம் அணுஉலையில் எரிபொருள் நிரப்பும் பணி நிறைவு



கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது அணு உலையில் எரிபொருள் நிரப்பும் பணி நிறைவு பெற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


கூடங்குளம் அணுஉலைகளில் எரிபொருள் நிரப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உச்ச நீதிமன் றத்தை அணுகியபோது எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் முதலாவது அணுஉலையில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் நிரப்பும் பணி கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகியது.

இந்தப் பணி கடந்த முதலாம் திகதி நிறைவடைந்ததாக கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து கிரிட்டிகாலிட்டி எனப்படும் மின் உற்பத்திக்கு முந்தைய பணி தொடர்பான ஆய்வில் இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணைய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பான பணிகள் ஒரு மாத காலத்திற்கு மேல் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.




# நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் தகவல்வழங்க மறுக்கும் பிரதமர் அலுவலகம்

(புதுடில்லி)

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு குறித்த தகவல்களை வழங்க, பிரதமர் அலுவலகம் மறுத்துள்ளது. இந்த விவகாரத்தை, சி.பி.ஐ. விசாரித்து வருவதால், தகவல்களை வெளியிட முடியாது என தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சியில், 2006ஆம் ஆண்டு முதல், 2009ஆம் ஆண்டு வரை, தனியார்களுக்கு நிலக்கரி சுரங்கம் ஒதுக்கீடு செய்ததில், இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டதாக, தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி அறிக்கை வெளியிட்டிருந்தார். இதனால், நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. நாடாளுமன்றில், பா.ஜ. வினர் கடும் அமளியில் ஈடுபட்டனர்.இந்த முறைகேடு குறித்து, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. மேலும், 1993ஆம் ஆண்டு, பாரதிய ஜனதா தலைமையிலான, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின் போது நடந்த, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு குறித்தும், சி.பி.ஐ. விசாரிக்கிறது.

இந்நிலையில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில், விவேக் கார்க் என்ற வழக்கறிஞர், நிலக்கரி ஒதுக்கீடு குறித்து, பிரதமர் அலுவலகத்திடம் சில தகவல்களைக் கேட்டிருந்தார்.

நிலக்கரித் துறை அமைச்சர் மற்றும் பிரதமர் இடையே நடந்த சந்திப்புகள், ஒதுக்கீடு முடிவுகள் குறித்த நகல்கள், உத்தரவுகள், கடிதங்கள் போன்ற தகவல்களைத் தருமாறு,



பிரதமர் அலுவலகத்திடம் கேட்டிருந்தார். அதற்குப் பதிலளித்து, பிரதமர் அலுவலகம் கொடுத்துள்ள பதிலில், இந்த விவகாரம் குறித்து, சி.பி.ஐ., விசாரித்து வருவதால், சுரங்க ஒதுக்கீடு குறித்த தகவல்களைத் தர முடியாது அவ்வாறு தருவது, விசாரணையைப் பாதிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

# அசாமில் தொடரும் சோகம் 300 குடிசைகள் நாசம்

## 2 குழந்தைகள் பலி



அசாமில் 300 குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் தீயில் கருகி 2 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

அசாம் மாநிலம் கவுகாத்தியில் ரயில் தண்டவாளம் அருகில் ஏராளமான குடிசைகள் உள்ளன.

300 குடிசைகள் கொண்ட இப்பகுதியில் நேற்று முன் தினம் இரவு ஒரு குடிசையில் திடீரென தீப்பிடித்தது.

தீ பரவி. சிறிது நேரத்தில் அனைத்து குடிசைகளுக்கும் பரவியது.

இது பற்றி தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து 2 மணி நேரம் கடுமையாகப் போராடித் தீயை அணைத்தனர்.

இவ்விபத்தில் 2 குழந்தைகள் தீயில் கருகி உயிரிழந்தன. இச்சம்பவம் அம்மாநிலத்தில் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த வருடத்தில் அதிகமான சோகங்களை சந்தித்து வரும் மாநிலமாக அசாம் கருதப்படுகிறது.

ஏற்கனவே மழை, வெள்ளம், கலவரத்தால் பாதிக்கப்பட்ட அசாமில் இந்த தீ விபத்து அம்மாநில மக்கள் மனதில் நீங்காத துயரமாக அமைந்துள்ளது.

# தொடர்ந்து 9 ஆவது முறையாக நோபல் பரிசுக்கு சோனியா சிபாரிசு



மருத்துவம், விஞ்ஞானம், இலக்கியம், உலக சமாதானம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலக சாதனை படைக்கிறவர்களுக்கு நோபல் பரிசு வழங்கி சிறப்பிக்கப்படுகிறது. அந்த வகையில் 2012ஆம் ஆண்டுக்கான, உலக சமாதான நோபல் பரிசுக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிந்துரையை டில்லியை தலைமையிடமாக கொண்டு செயற்படும் சர்வதேச விழிப்பூட்டும் மையம் (ஐ.ஏ.சி) செய்துள்ளது.

சோனியாவின் பெயர் தொடர்ந்து 9ஆவது முறையாகப் பரிந்துரைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து சர்வதேச விழிப்பூட்டும் மையத்தின் தலைவர் மஜாஜ் முங்கெரி கூறுகையில், சோனியா காந்தி மிகப்பெரிய உலக சமாதான ஆர்வலர். மிகப்பெரிய சமூக ஆர்வலரும், ஆவார். எனவே அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கும்படி சிபாரிசு செய்துள்ளோம் என்றார்.

# சினிமாக் கலைஞர்களை உருவாக்க கமலின் பயிற்சி பாடசாலை



கலைஞர்களின் திறமையை வளர்க்க நடிகர் கமலஹாசன் பயிற்சிப் பாடசாலையை ஆரம்பிக்கவுள்ளார்.

குறிப்பாக சினிமா துறையில் உள்ள இளம் தொழில் நுட்ப கலைஞர்களின் திறமையை மேம்படுத்துவதற்காக சென்னையில் பயிற்சிப் பாடசாலை ஒன்றை தொடங்க கமலஹாசன் முயற்சி எடுத்து வருகிறார். இதுபற்றிய விபரங்களை கமலஹாசன் தரப்பினர் சேகரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக சமீபத்தில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கமலஹாசன் கூறியதாவது;

நான் சிறு வயதில் இருந்தே, சினிமாவில் நடிகராக வேண்டும் என்று விரும்பினேன். அப்போது நடிப்பு பயிற்சி எடுத்துக்கொள்ள இடங்களோ, வசதிகளோ கிடையாது. ஆனால் இப்போது அதற்கான வசதிகள் பிரமிக்கத்தக்க வகையில் பெருகி விட்டன. நடிப்பு பயிற்சிக்காக ஏராளமான பாடசாலை உள்ளன. அதே சமயத்தில் சினிமா தொழில்நுட்ப கலைஞர்கள், சண்டைக் கலைஞர்கள் மற்றும் திரைக்கு பின்னால் கடினமான பணிகளைச் செய்பவர்கள், இவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க பாடசாலைகள் கிடையாது.

எனவே அப்படிப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் ஒரு பாடசாலையைத் தொடங்க முயற்சி எடுத்து வருகிறோம். இது குறிப்பாக இளம் தொழில்நுட்ப கலைஞர்களின் திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும் என்றார்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# 2 மில்லியன் தொழிலாளர்கள் இந்தோனேஷியாவில் போராட்டம்



இந்தோனேஷியாவில் 2 மில்லியன் ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும், ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இப்போராட்டம் நடத்தப்படுகிறது.

12 மாகாணங்களில் சுமார் 750,000 தொழிலாளர்கள் போராடடங்களில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 2 மில்லியன் தொழிலாளர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சம்பள பணத்தை அதிகரி, வெளி ஆள் ஒப்பந்தங்களை நிறுத்து' போன்ற பதாகைகளை ஏந்தி இருந்தனர்.

இது குறித்து இந்தோனேஷியா தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் யோரிஸ் ராவெய் கூறுகையில், நிறுவனங்கள் எந்த வித நன்மைகளையும் தராமல் ஆண்டிற்கு ஒருமுறை ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையை மீளாய்வு செய்ய வேண்டும் எனக் கோரியே இப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது அரசியலமைப்பிற்கு முரணானது என்று இந்தோனேஷியா அரசியலமைப்பு நீதிமன்றம் ஏற்கனவே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரமாண்டமாகக் கட்டப்படும் “டைட்டானிக் - 2” கப்பல்



மிக பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட டைட்டானிக் கப்பல் தன்னுடைய முதல் பயணத்திலேயே பனிப்பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி ஏற்பட்ட இந்த விபத்தில், கப்பலில் பயணம் செய்தவர்களில் 1500 பேர் வரை கடலில் மூழ்கி இறந்தனர்.

இந்தக் கதையைக் கொண்டு இயக்குனர் ஜேம்ஸ் கேமரூன் தயாரித்த திரைப்படம், உலகம் முழுவதும் மாபெரும் வெற்றி பெற்றது. இந்நிலையில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் டைட்டானிக் கப்பலைப் போன்றே பிரம்மாண்டமான 2வது கப்பலைக் கட்டி வருகிறார்.

சீனாவில் கட்டப்பட்டு வரும் இந்த கப்பலின் நீளம் 270 மீற்றராகும். 40,000 தொன் எடையைக் கொண்டது. மேலும் இதில் 840 அறைகளும், 9 தளங்களும் முதல் 2ஆவது மற்றும் 3ஆவது வகுப்புகளையும் கொண்டிருக்கும்.

இதுகுறித்து பால்மர் கூறுகையில், டைட்டானிக்2 கப்பல் சீனாவில் கட்டப்பட்டு வருகிறது.

இக்கப்பல் 2016ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நகரை வந்தடையும். அங்கிருந்து நியூயோர்க் நகருக்கு தன்னுடைய முதல் பயணத்தைத் தொடங்கும். டைட்டானிக் 2 கப்பலின் முதல் பயணத்தில் பங்கேற்க இயக்குநர் ஜேம்ஸ் கேமரூனுக்கு அழைப்பு விடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

# 38 கத்திக் குத்துடன் தப்பிய குண்டு மனிதர்



இங்கிலாந்தில் 38 கத்திக் குத்து வாங்கியும் நபர் ஒருவர் உயிர் தப்பியுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

இங்கிலாந்தில் எக்ஸிடர் நகரில் வசிப்பவர் டேனி ரோஸ (வயது 44). இவர் கடந்தாண்டு ஒகஸ்ட் மாதம் ஒரு நாள், வீட்டில் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்தார்.

அப்போது பக்கத்து வீட்டில் வசிக்கும் டேவிட் ஜான்சன் என்பவர் இவரது வீட்டுக்கு வந்தார்.

வீட்டுக்குள் நுழைந்த ஜான்சன் தனது இடுப்புப்பட்டியில் ரோஸின் கழுத்தை இறுக்கினார். பின்னர் அவரை கத்தியால் சரமாரியாகத் குத்தினார்.

மொத்தம் 38 கத்திக்குத்து விழுந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ரோசுக்கு 70 தையல் போடப்பட்டது.

விசாரணையில், தனது வீட்டில் திருடியது ரோஸ் என்று நினைத்து கோபத்தில் அவ்வாறு நடந்து கொண்டதாக ஜான்சன் தெரிவித்தார்.

உயிர் பிழைத்த ரோஸ் கூறுகையில், இடுப்புப்பட்டியால் கழுத்தை நெரித்த உடனேயே நான் மயங்கி விட்டேன். பொலிஸ் எடுத்த புகைப்படங்களைப் பார்த்தால் நான் தப்பியதை என்னாலேயே நம்ப முடியவில்லை.

நான் குண்டாக இருந்ததால் தான் பிழைக்க முடிந்தது. ஒல்லியாக இருந்திருந்தால் இறந்திருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் ஒபாமா ஆட்சியில் நடுத்தர மக்கள் புதையுண்டு போனார்கள்



ஒபாமாவின் ஆட்சியில் நடுத்தர மக்கள் புதையுண்டு போயுள்ளார்கள் என அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடேன்தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவும், மிட்ரோமினியும் போட்டியிடுகின்றனர். இருவரும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடென் கூறுகையில், ஒபாமாவின் தவறான பொருளாதாரக் கொள்கையால் அமெரிக்காவில் வசிக்கும் நடுத்தர மக்கள் புதையுண்டு போனார்கள்.

ஒபாமாவின் வலுவிழந்த அரசாங்கத்தினால் பொருளாதாரத்தில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

நடுத்தர மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பராக் ஒபாமாவும், மிட் ரோம்னியும் ஒரே மேடையில் பிரசாரம் செய்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி பராக் ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் பல்வேறு மாகாணங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். ஜனாதிபதி ஒபாமாவுக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நேற்று டென்வர் நகரில் இருவரும் ஒரே மேடையில் தோன்றி பிரசாரம் செய்தனர்.

இருவரும் பொருளாதாரம் மற்றும் உள்நாட்டு கொள்கைகள் குறித்து தங்களது நிலையை ஆராய்ந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒரே மேடையில் தோன்றி விவாதிப்பது கடந்த 1960ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விண்வெளி நிலையத்தை வேறு பாதைக்கு நகர்த்த முடிவு


சர்வதேச விண்வெளி நிலையத்தை வேறு பாதைக்கு நகர்த்த ரஷ்ய விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

விண்வெளியில் சுற்றிக் கொண டிருக்கும் தேவையற்ற பொருட்கள் மோதி, சர்வதேச விண்வெளி நிலையம் சேதமடையாமல் தடுப்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.


இது குறித்து ரஷ்ய விண்வெளித் திட்டக் கட்டுப்பாட்டு மைய செய்தி தொடர்பாளர் நெதயேஸ்டா ஜவ்யலோவா கூறுகையில், சர்வதேச விண்வெளி நிலையத்தை சிறிய உந்து ரொக்கெட்டுகளைக் கொண்டு நகர்த்தத் திட்டமிட்டுள்ளோம். என்று தெரிவித்துள்ளார்.

விண்வெளியில் பூமி சுற்றுப் பாதையில் 10 சென்டி மீற்றருக்கும் அதிகமான தடிமன் கொண்ட 21 ஆயிரம் தேவையற்ற பொருட்கள் சுற்றி வருகின்றன.

இவை விண்வெளி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளன என்று நாசா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# சவுதியில் பெண்களுக்கு சுதந்திரம்; பொலிசாரின் அதிகாரங்கள் குறைப்பு



சவுதி அரேபியாவில் மத பொலிசார் அத்து மீறி நடப்பதால் அவர்களது அதிகாரம் குறைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் இஸ்லாமிய நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. பெண்கள் பர்தா அணிந்து தான் வெளியே வரவேண்டும், கார் செலுத்தக் கூடாது ஆண் துணையில்லாமல் இளம் பெண்கள் கடைக்குச் செல்லக்கூடாது என்பன போன்ற சட்டத்திட்டங்கள் அமுலில் உள்ளன.

இந்த நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கு பொலிஸ் துறையில் தனிப் பிரிவு செயற்படுகிறது. வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் பணியில் ஈடுபடும் இந்த பொலிஸார் தனியாக வரும் பெண்களைக் கடைக்குள் அனுமதிப்பதில்லை.

சமீபத்தில் ஒரு பெண் நகத்தில் சாயம் பூசி இருந்ததற்காக வணிக வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இது தொடர்பாக அவர் பொலிஸ்காரருடன் நடத்திய வாக்குவாதத்தை மொபைல் போனில் பதிவு செய்து இணையத்தளத்தில் வெளியிட்டார்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், அடக்குமுறைக்கு சவுதி பெண்கள் ஆளாவதாக வரும் தொடர் புகார் காரணமாக மத பொலிஸாரின் அதிகாரங்களைக் குறைக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

# சமூக உருவாக்கத்தின் சிற்பிகள் ஆசிரியர்களுக்கு ஆளுநர் வாழ்த்து



மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது எமது சமூகத்தின் மிகவும் அடிப்படையான தாரக மந்திரமாக உள்ளது. பெற்றோர்க்கு அடுத்தபடி நிலையில் கௌரவிக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆகும். எமது மாணவர்கள் தான் எதிர்காலத்தின் விலை மதிக்க முடியாத சொத்துக்கள். கல்வியறிவும், நற்பண்புகளும், சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் உயர்ந்த ஒரு சமூக உருவாக்கத்தின் அச்சாணிகளாக விளங்கும் ஆசிரியர்கள் சமூகத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் மதிக்கப்பட வேண்டும். இன்றைய தகவல் தொழில் நுட்ப யுகத்திலே எதிர்கால சவால்களை சமாளிக்கத்தக்க வகையில் ஆற்றலும், ஆளுமையும் மனிதநேயமும் உடையவர்களாகவும் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய இயலளவுடைய மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதில் ஆசிரியர்கள் வினைத்திறனும் விளைதிறனும் சமூக பொருத்தப்பாடுமுடைய அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். இன்றைய நன்நாளில் எமது மாணவர்களிற்கு அறிவொளியினை வழங்கிக்கொண்டிருக்கும் எமது ஆசிரியர்களிற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதுடன் வடமாகாண கல்விபுலம் எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளைப் படைத்து பெருமையினை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# நாடாளுமன்றத்தில் வடக்கின் ‘திவிநெகும’

வடக்கு மாகாண சபை இதுவரை உருவாக்கப்படாத நிலையில் -திவிநெகும- சட்டமூலத்தை நிறைவேற்றும் நடவடிக்கைகள் அரசியலமைப்புக்கு முரணற்ற வகையில் மேற்கொள்ளப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலளர் சந்திப்பு நேற்று முற்பகல் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

திவிநெகும சட்டத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முன்னர் அனைத்து மாகாண சபைகளிலும் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அரசாங்கம் ஏற்று அதற்கு மதிப்பளித்து செயற்படுகின்றது.

இதன்படி இச்சட்டமூலத்துக்கு 8 மாகாணசபைகளினதும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எனினும் இதுவரை உருவாக்கப்டாத வடக்கு மாகாணசபை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை அரசியலமைப்புக்கு முரணற்ற வகையில் தீர்த்துவைக்கப்படும்.

ஒரு மாகாணசபை இன்னும் இயங்கவில்லை என்பதற்காக முழு நாட்டையும் இருளில் தள்ளிவிட முடியாது. இயங்காத ஒரு மாகாண சபையின் அங்கீகாரம் பெறும் வழி என்ன என்பது அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது. அதற்கு முரணற்ற வகையில் அரசு செயற்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நவீன உலகை...

இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இந்நிலையம் செயற்பட வேண்டும். அந்த வகையில் நவீன உலகை நோக்கியதான பல்வேறு செயற்றிட்டங்களை யாழ். மாவட்டத்தில் நாம் ஏற்கனவே முன்னெடுத்துவரும் நிலையில் இவ்விற்பனை நிலையத்தின் பங்கும் பேருதவியாக அமையும் என்றும் தெரிவித்தார்.

FUTUREWORLD Authorised Reseller இன் தேசிய இணைப்பாளர் மனிஷ் பற்றிக்காரா உரையாற்றும் போது, இந்நிலையத்தினூடாக நவீன உலகை நோக்கியதான இலக்கை நோக்கி முழுமையான சேவையை வழங்கத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

முன்பதாக மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்பட்ட அமைச்சர் புதிய மீள் விற்பனை நிலையத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து விற்பனைக் கூடத்தைப் பார்வையிட்ட அமைச்சர் விற்பனை நடவடிக்கைகளையும் சம்பிரதாயப் பூர்வமாகத் தொடக்கிவைத்தார்.

சிங்கப்பூரை தலைமையகமாகக் கொண்டிருக்கும் குறித்த நிறுவனத்தின் கிளைகள் ஏற்கனவே. இலங்கையில் கண்டி, கொழும்பு 05, மற்றும் 07 ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் நிலையில் நேற்றையதினம் ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் அதன் 04 ஆவது கிளையைத் திறந்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

## குறைத்து...

அமர்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சில தரப்பினர் இலக்குகளை மாற்றி மாற்றி அறிவிக்கின்றனர். இதனால் இலங்கைக்கு மட்டுமன்றி உறுப்பு நாடுகளுக்கும் அசௌகரிய நிலைமை ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டுகளாக நீடித்த யுத்தத்தின பின்னர் நாடு அடைந்துவரும் அபிவிருத்திகளை அங்கீகரிக்காது,

குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகின்றனர். உலகின் பல நாடுகளில் மனிதாபிமான நெருக்கடிகள் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறான நாடுகளுக்கு இலங்கை நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு, உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தல் போன்ற பல்வேறு காரணிகளில் பாரியளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற துறைகளில் இலங்கை பெற்றுக்கொண்ட அனுபவங்களை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முல்லையில்...

இந்த மக்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை அரசாங்கம் வழங்கியுள்ளன. எனினும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இந்த மக்களிடம் பணமில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## வட, கிழக்கு...

அழியவிடப்படுமாயின் இலங்கை ஆசியாவின் கழிவு கொட்டும் இடமாகிவிடும். அபிவிருத்தித் திட்டங்களை வரையும் போது உலக வங்கி போன்ற நன்கொடை நிறுவனங்களின் ஆலோசனையை அரசாங்கம் பின்பற்றக்கூடாது.

எம்மை பிச்சை எடுக்க வைக்கவே அவர்கள் எமக்கு கடன் தருகின்றனர். இதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்கும் நோக்கில் சமூகங்களிடையே மோதலை ஏற்படுத்த முயலும் வேறு சர்வதேச சக்திகளும் உள்ளன. இன்று இந்த சக்திகளினால் உருவாக்கப்பட்ட பல பொம்மை அரசாங்கங்கள் உலகில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய...

பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றதா, அவற்றில் அதிகாரிகள் யாரேனும் சம்பந்தப்பட்டிருக்கின்றார்களா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் முறையிட்டவர்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு அடுத்த கட்டப் பயனாளிகள் தெரிவில் இடமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு ஐயாயிரம் வீடுகள் ஒதுக்கப்ப்ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய...

போது அவர் குறிப்பிட்டார். வீதிகளை அகலமாக்கவும், நடைபாதைகளுக்கு ஓடு பதிக்கவும் அரசாங்கம் அதிக பணத்தை ஒதுக்குகின்றது. ஆனால், உயர் கல்வியின் மூலதனச் செலவில் 47 சதவீதத்தை 2011 இல் அரசாங்கம் வெட்டியுள்ளது.

அரசாங்கம் இலவசக் கல்விபற்றி பெரிதாகப் பேசுகின்றது. ஆனால், அரசாங்கம் கல்விக்காக செலவளிப்பதை விட மக்கள் கல்விக்காக கூடுதலாக செலவளிக்கின்றனர் என அவர் கூறினார்.

யுத்தம் நடந்த காலத்து பொருளாதார வளர்ச்சியை விட தற்போதைய வளர்ச்சி வெகுவாக குறைந்துள்ளது. வரவு - செலவுத் திட்டக்குறையை நிரப்ப ஒதுக்கிய தொகையில் மிகப்பெரும் பகுதியை ஆறுமாத காலத்திலேயே அரசாங்கம் முடித்துவிட்டது.

இன்னும், ஆறு மாதங்கள் போக வேண்டியுள்ளது. அடுத்த 3 மாதங்களில் மின் கட்டணம், எரிபொருள் விலை, இறக்குமதி தீர்வைகள் அதிகரிக்கப்படும் என அவர் கூறினார்

# கொட்டடி கொல்களம் மீண்டும் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொட்டடியில் அமைந்துள்ள கொல்களம் 03.10.2012 அன்று பூட்டப்பட்டதைத் தொடர்ந்து மாநகர முதல்வர் நேற்றுக் காலை சம்பவ இடத்திற்கு முதல்வர் விஜயம் செய்தார். அவருடன் குகநேசன் (எஸ்.எஸ்.பி) சுற்றுச் சூழல் பொலிஸ் உத்தியோகத்தர் பி.ஜெயந்த, மாநகர சபையின் பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் ஆகியோரும் உடன் சென்று நிலைமையை ஆராய்ந்து தவறான தகவல்களின் அடிப்படையில் பூட்டப்பட்டதைக் கண்டறிந்து உடனடியாகத் திறந்து வைத்து வழமையான செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

# மத்திய கல்லூரி மாணவனுக்கு விருது

கொழும்பு றோயல் கல்லூரியினால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்கான நாடகத்திறன்காண் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் தவராசா சண்முகப்பிரியன் நாடகப்பிரதியாக்கப் போட்டியில் தேசிய ரீதியில் வெற்றிபெற்று வேத்தியல் விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற நாடகத்திறன்காண் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கலலூரி மாணவன் தேசிய ரீதியில் முதல் தடவையாக வெற்றி பெற்றுள்ளார்.

இவர் நாடகப்பிரதியாக்கப் போட்டியில் தேசிய ரீதியில் 7 ஆம் இடத்தினைப் பெற்று விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். தேசிய ரீதியிலான வேத்தியல் விருதினைப் பெற்றுக்கொண்ட சண்முகப்பிரியனுக்கான வழிப்படுத்தலினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக மன்றப்பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன் ஆசிரியர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்பட்ட விதியின் வலி என்னும் நாடகம் சிறந்த தயாரிப்புக்கான நான்கு விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்கலைச் சட்டத்தில் திருத்தம் அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு சமமான தரத்தில் உள்நாட்டு பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 1978 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் திருததங்களைச் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்கா தெரிவித்தார்.

எமது பல்கலைக் கழகங்களைப் பற்றியும் கல்விச் சீர்த்திருத்தத்தில் அரசாங்கத்தின் வகிபாகம் பற்றியும் பாதகமான அறிக்கைகள் அண்மையில் வந்துள்ள போதிலும் கல்வி முறைமையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான தெளிவான தொலைநோக்கு அரசாங்கத்துக்கு உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்கள், மீன்பிடி அமைச்சு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, சுகாதார அமைச்சு என்பவையும் கல்வி மீது செலவு செய்வதனால் இலங்கையில் கல்விக்கான ஒதுக்கீடு ஐந்து சதவீதத்திலும் கூடுதலானது என அவர் மேலும் கூறினார்.

## மாணவர்களை...

யாழ்ப்பாணம் ஏற்றிச் சென்ற பேருந்தே இவ்வாறு பளைப் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் இராஜேந்திரகுமார் அவசர சிகிச்சைக்காகப் படையினரின் விசேட விமானம் மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவ்விபத் துடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் பளை மற்றும் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முகாமைத்துவக் குறைபாடுகளே கல்விப் பிரச்சினைக்கு காரணம்

## ராஜீவ விஜேசிங்க எம்.பி. தெரிவிப்பு




(கொழும்பு)

முகாமைத்துவ குறைபாடுகளே கல்விப் பிரச்சினைகளுக்கு காரணமாகும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். நாட்டின் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு முகாமைத்துவக் குறைபாடுகளே காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உற்பத்தித் திறன் வீழ்ச்சி மற்றும் முகாமைத்துவ சீர்கேடுகளே பிரச்சினைகளுக்கான பிரதான ஏதுவெனக் குறிப்பிட்டுள்ளார். பிரத்தியேக வகுப்புக்கள், பல்கலைக்கழக, பாடசாலை மற்றும் ஏனைய பாட விதானங்களில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகளினால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தியில் கல்வித்துறைக்கு 6 வீதத்தை ஒதுக்குதல் போன்ற காரணிகளை விடவும், முகாமைத்துவக் குறைபாடுகள் களையப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தாக்குதலுக்கு இலக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம்




நேற்றுக் காலை பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தை நோக்கிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

பங்களாதேஷில் உள்ள பௌத்தர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்று பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் மீது தண்ணீர் போத்தல்களையும் வீசியுள்ளனர். இதன் காரணமாக உயர்ஸ்தானிகராலயத்தின் ஜன்னல்கள் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்ற தாக்குதல் அறுவருக்குப் பிணை

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஆறு பேர் நேற்றுப் பிற்பகல் மன்னார் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் ஆறு பேரினால் மன்னார் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவிற்கமையவே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆறு பேரும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் மன்னார் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த ஜுலை 18ஆம் திகதி தாக்குதல் மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 13 பேரில் இந்த ஆறு பேரும் உள்ளடங்குகின்றனர்.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது, மன்னார் மேலதிக நீதவான் ஆர். எல்.எம். திஸாநாயக்கவினால் இவர்களுக்கான பிணை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இனக்கலவரங்களுக்கு இடமளிக்கப்படாது

## அரசாங்கம் அறிவிப்பு

பங்களாதேஷில் நடைபெற்ற பௌத்த விகாரைகள் அழிப்பு தொடர்பில் இலங்கையில் இனக் கலவரங்கள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காதென அமைச்சரவைப் பேச்சளரும் தகவல் ஊடகத் துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலளார் சந்திப்பு நேற்று முற்பகல் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்:

பௌத்த வணக்கஸ்தலங்கள் பங்களாதேஷில் அழிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. இலங்கையில் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்த சிலர் இச்சம்பவத்தை ஒரு காரணமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் அரசு உணரந்துள்ளது.

இச்சம்பவத்துக்கு எதிராக இலங்கையில் உள்ள முஸ்லிம் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் இனிமேலும் அந்த நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாதென்றும் அந்த அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இதனை இலங்கை அரசாங்கம் வரவேற்கின்றது.

எனவே பொறுப்புள்ள அரசாங்கம் என்றவகையில் இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண நாம் உ[illegible] நடவடிக்கைகள் மேற்கொள்வோம் என்றும் அமைச்சர் கூறினார்.

# இறுதிப் போட்டியில் இலங்கை



இருபதுக்கு இருபது உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 16 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றிரவு இடம் பெற்ற இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மஹேலவை தவிர வேறு எவரும் பெரிதாக பிரகாசிக்கவில்லை. இலங்கை அணி சார்பில் மஹேல 42, திலகரத்ன டில்ஷான் 35, சங்கக்கார 18, ஜீவன் மெண்டிஸ் 15, திஸார பெரேரா 11, மத்தியூஸ் 10 என ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அஜ்மல், அப்ரிடி, ஹபீஸ், உமர் குல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெடடுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு 140 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 123 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இதன்படி இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் ஹபீஸ் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ரங்கண ஹேரத் 3 மற்றும் மத்தியூஸ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழத்தினர். போட்டியின் நாயகனாக மஹேல தெரிவானார்.

# தமிழக பயணத்தடை விலக்கல்; பீரிஸ் நாடு திரும்பிய பின் முடிவு

நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பு திரும்பிய பின்னரே, தமிழ்நாட்டுக்கான பயண எச்சரிக்கையை விலக்கிக் கொள்வது குறித்து முடிவு செய்யப்படுமென வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம, பயண எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னர் எத்தகைய தாக்குதல் சம்பவமும் இடம்பெறவில்லை. இந்தநிலையில் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இன்று காலை கொழும்பு திரும்புவார். அதன் பின்னரே இந்த பயண எச்சரிக்கையை விலக்கிக்கொள்வது குறித்து முடிவு செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, தமிழ்நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் இலங்கைப் பயணிகளின் பாதுகாப்புக்கு இந்தியா உத்தரவாதம் கொடுத்துள்ளதாக, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் பிரேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைச் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து கடந்த மாதத் தொடக்கத்தில், தமிழ்நாட்டுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நவம்பர் 28 இல் அமைச்சர் றிசாட் நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீனை எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு மன்னார் மேலதிக நீதவான் ஆர்.எல்.எம்.திஸாநாயக்க உத்தரவிட்டார்.

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் மற்றும் மன்னார் நீதவானுக்கு தொலைபேசி ஊடாக மிரட்டல் விடுக்கப்பட்டமை ஆகியன தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போதே, அமைச்சர் றிசாட் பதியுதீனை எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு மேலதிக நீதவான் திஸாநாயக்க உத்தரவிட்டார்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.எம்.சுஹைர், அனுர மெத்தகொட மற்றும் என்.எம்.சஹீட் உட்பட 25 சட்டத்தரணிகளுடன் அமைச்சர் றிசாட் பதியுதீன் நேற்று நீதிமன்றில் ஆஜராகினார்.

இதன்போது, அமைச்சர் றிசாட் பதியுதீனின் கருத்துக்களை சுதந்திரமாக நீதிமன்றில் வெளியிட அனுமதி வழங்குமாறு மன்னார் மேலதிக நீதவானிடம் அமைச்சர் சார்ப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நிலையில், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி மன்னார் மேலதிக நீதவான் ஒத்திவைத்தார்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் நீதிமன்றில் ஆஜராகுவதை முன்னிட்டு மன்னார் நீதிமன்றம் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாக்கு நீரிணையில் பாதுகாப்பு அச்சுறுத்தல்

பாக்கு நீரிணைப் பகுதியில் தொடர்ந்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவி வருவதாக இந்தியா அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் தொடர்ந்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல் நீடித்து வருவதாக இந்தியாவின் கிழக்கு கரையோரப் பகுதிக்குப் பொறுப்பான கடற்படை உயர் அதிகாரி ரியர் அட்மிரல் பி.கே. வர்மா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தலை அடுத்து கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகள் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் முற்று முழுதாக தீர்ந்துவிடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிறீன் காட் விஸா விண்ணப்பம் கோரல்

அமெரிக்காவில் சட்டபூர்வமாக வாழ்வதற்கும், தொழில் புரிவதற்கும், கல்விகற்பதற்கும் வாய்ப்பளிக்கப்படும் கிறன் காட் லொத்தர் என்ற பல்வகை குடிவரவு விஸா லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்திற்கான இணையத்தள மூலமான விண்ணப்பப் படிவங்கள் தற்சமயம் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

இந்த அறிவித்தலை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த லொத்தர் மூலம் இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்படுவோர் அமெரிக்காவில் சட்டபூர்வமாக வாழ்வதற்கும், தொழில் புரிவதற்கும், கல்விகற்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

இந்த விண்ணப்பத்தை பெற விரும்புவோர் www.dvlottery.state.gov இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் இது தொடர்பான விளக்கங்கள் தரப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. கிறீன் காட் லொத்தர் திட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.